**GTV Express**
HKG மேல் IKG க்கு
லண்டன் (UK) – 1350
பிரான்ஸ் – 2350
- 255, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
- 81A, பொயிண்ட் பெட்ரோ வீதி. நெல்லியடி.
- A9, வீதி (கந்தசாமி கோவிலுக்கு முன்னால்) கிளிநொச்சி.
- 25, கந்தசாமி கோவில் வீதி. வவுனியா.

☎ +94 11 465 44 44

Registered as a Newspaper
சஞ்சீவி
# உதயன்

சுடர் : 38
கதிர் : 106
ஞாயிற்றுக்கிழமை 12 மார்ச் 2023
மாசி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054
விலை ரூ. 60
பக்கங்கள் 16+8

## என்ன நடக்கப்போகின்றது? பொறுத்திருந்துபார்ப்போம்

### தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் விரக்தி

கொழும்பு, மார்ச் 12
உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து நிதி அமைச்சும், நாடாளுமன்றமும் செயற்படும் என்று நாம் நினைக்கின்றோம். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைக்கவும் முடியாது. மக்களின் ஜனநாயக உரிமைக்கு எவரும் »15

## வாக்குச்சீட்டை அச்சிட பணம் கிடைக்கவில்லை

### அரச அச்சகத்தால் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12
குறிப்பிட்ட காலத்துக்குள் வாக்குச்சீட்டுக்களை வழங்குவதற்கும், அரச அச்சகத்துக்கான பாதுகாப்பை வழங்குவதற்கும், எரிபொருள்களை வழங்குவதற்கும் துறைசார் உயர் அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் »15

## காலாவதி கண்ணீர்ப்புகைக்குண்டால் போராட்டங்களை கட்டுப்படுத்தமுடியாது

### இப்படிச் சொல்கிறார் பொலிஸ் பேச்சாளர்



கொழும்பு, மார்ச் 12
காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் செயலிழந்தவையாகவும், செறிவு குறைந்தவையாகவுமே காணப்படும். அவற்றைக்கொண்டு ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தமுடியாது. சில தரப்பினரால் தெரிவிக்கப்படுவதைப் போன்று »15

### மொறட்டுவ பல்கலையில் பகிடிவதை

## யாழ்ப்பாண மாணவன் உயிர்மாய்க்க முயற்சி!

யாழ்ப்பாணம், மார்ச் 12
மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவன், சிரேஷ்ட மாணவர்களின் பகிடிவதையைத் தாங்காது தவறான முடிவு எடுத்து உயிர் மாய்க்க முயன்றுள்ள நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளான். »15

## ஒரே நாளில் 4 மோ.சைக்கிள் யாழ்ப்பாணத்தில் களவு

### திருடர்களை நெருங்குகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ். மாவட்டத்தில் இரண்டு மணி நேர இடைவெளியில் 4 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கும் நேற்று அதிகாலை »15




## வசந்த முதலிகே குழு யாழ்ப்பாணம் வந்தது

### பல்கலை மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களுடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று திடீரென வருகை தந்துள்ளனர். »15

## கடமைநேரத்தில் மதுபோதை: சிக்கினர் இரண்டு பொலிஸார்

யாழ்ப்பாணம், மார்ச் 12
நிலாவரைப் பகுதியில் விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்த அழைத்துச் சென்ற பொலிஸார் இருவர் »15

### வடக்கின் போர்

## வெற்றிக்கொடி நாட்டியது யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி, 116 ஆவது வடக்கின் போரில் மகுடம் சூடியது யாழ். மத்திய கல்லூரி அணி. ஆனாலும், இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க நேற்றைய மூன்றாம் »04

## போர்க்குற்றங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?


### இலங்கையிடம் கேள்வி எழுப்புகிறது ஐ.நா.

கொழும்பு, மார்ச் 12
போர்க்குற்றங்களும், மனித குலத்துக்கும் எதிரான மீறல்களும் உள்நாட்டு சட்டத்தில் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா? இந்த மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக [illegible] »15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் கடற்பரப்பில் 126 கிலோ கஞ்சா மீட்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 12**

**இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் மாரிசன்கூடல் கடற்பரப்பில் 126 கிலோ 800 கிராம் கஞ்சா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கடற்படையால் மீட்கப்பட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

மாரிசன்கூடல் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட படகொன்றை கடற்படையினர் சோதனைக்குட்படுத்தியபோது 126 கிலோ 800 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் கஞ்சாவை நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இளவாலைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-14,125)

## கசிப்புடன் இளைஞர் சுழிபுரத்தில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 12

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பாண்டவெட்டைப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம்பாண்டவெட்டைப் பகுதியில் விசேட ரோந்துப் பணியில் ஈடுபட்ட வட்டுக்கோட்டை பொலிஸார், இளைஞர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பைக் கைப்பற்றினர். அதனையடுத்து இளைஞர் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,125)

## மதுவிற்பனை நிலையத்துக்கு எதிராக மனு

கிளிநொச்சி, மார்ச் 12

முழங்காவில் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உணவகத்துடன் கூடிய மதுவிற்பனை நிலையம் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முழங்காவில் பொது அமைப்புகள் பூநகரி பிரதேச செயலரிடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பகுதியில் மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மது விற்பனை நிலையம் அமைப்பதற்கு இந்த இடம் பொருத்தமற்றது. நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள மது விற்பனை நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் முழங்காவில் பகுதியில் அமைக்கப்படவுள்ள நிலையத்தை வேறு இடத்தில் மாற்றி அமைக்குமாறும் பூநகரி பிரதேசசபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14,13)



## ரயிலில் அநாதரவாக கைக்குழந்தை மீட்பு!

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற விரைவு ரயிலின் கழிவறையிலிருந்து சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து இந்தக் குழந்தை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நிலைய அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சிசு மீட்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சிசுவின் பெற்றோரான காதலர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொஸ்லந்த பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஆணும் பண்டாரவளையைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணுமே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



## வெடிபொருள்களுடன் சந்தேகநபர்கள் கைது

மன்னார், மார்ச் 12

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிமுனை கடற்கரைப் பிரதேசத்தில் வெடிபொருள்களுடன் இருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில், வெடிபொருள்கள் மற்றும் அதற்குப் பயன்படும் 160 அடி நூல் ஆகியன கைப்பற்றப்பட்டன. அதனையடுத்து சந்தேகநபர்களான இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நாரம்பன பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 54 வயதுடையவர்கள் என்று தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-14,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கசிப்புடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 12

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீலாப்புலம் பகுதியில் கசிப்புடன் இருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சீலாப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரிடமிருந்து 4 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் வாள் என்பன மீட்கப்பட்டன.

அத்துடன் அதே பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரிடமிருந்து 3 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருள்களுடன் பாரப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14)

## உடைமையில் கசிப்பு: இளைஞர் கைதானார்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப் பகுதியில் உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஊரெழு பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று சுன்னாகம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14,125)

## மயானத்தில் கைக்குண்டு

யாழ்ப்பாணம், மார்ச் 12

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தான்குளம் பகுதியில் அமைந்துள்ள மயானத்தில் செயலிழந்த நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மயானத்தில் சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை அவதானித்த பொதுமக்கள் இளவாலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலைப் பொலிஸார், சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருளை அவதானித்து கைக்குண்டு என இனங்கண்டனர். இதையடுத்து கைக்குண்டு அங்கிருந்து அகற்றப்பட்டது. (ம-14,125)



# ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த அவன்கார்ட் களமிறங்குகிறதா?

## ஜே.வி.பி.யினர் சந்தேகம்



**கொழும்பு, மார்ச் 12**
**ஆர்ப்பாட்டங்களின்போது, தடிகளுடன் இராணுவத்தினரைப் போன்று வருபவர்கள் அவன்கார்ட்டால் இயக்கப்படும் குழுவா? என்ற சந்தேகங்கள் நிலவுவதாக ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
'தேர்தல் கேட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும்போது பொலிஸார், இராணுவத்தைக் கொண்டு ஒடுக்கின்றனர். தடிகளைக் கொண்டு தாக்குதல்களை நடத்துகின்றனர். அண்மையில் ஆர்ப்பாட்டத்தின்போது இராணுவத்தினர் தடிகளை எடுத்து வந்தனர்.
இராணுவத்துக்கென தடிகளை வழங்கும்போது அதற்கான முறைகள், நிறங்கள், அளவுகள் உள்ளன.
ஆனால் அன்றைய தினத்தில் அவர்களிடம் இருந்த தடிகள் அப்படியானவை அல்ல. வரும்போது மரத்தில் வெட்டி வந்தது போன்றுதான் இருந்தது. இதனால் இவர்கள் உத்தியோகபூர்வமற்ற இராணுவம் போன்றே இருந்தனர். தடிகளுடன், துப்பாக்கிகளை ஏந்தி வந்தனர். இவர்கள் யார் என்று தெரியாது என இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்.
அப்படியென்றால் இவர்கள் யார்? மிலிட்டரி இராணுவத்தைக் கொண்ட அவன்கார்ட்டின் குழுவா இது? ஜனாதிபதி தனியாக வாளை எடுத்துக் கொண்டு சுற்றிக்கொண்டு இருக்கின்றார். எங்களை அழைக்கின்றார். நாங்கள் அங்கே போகமாட்டோம். இறுதியில் அவரே வயிற்றை வெட்டிக்கொள்ளும் நிலைமை ஏற்படும்' - என்றார். (ம-22)

# சவேந்திர சில்வாவை ஜே.வி.பி. பாதுகாக்கும்

## அநுர வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, மார்ச் 12
மக்கள் எழுச்சியின்போது அதனை ஒடுக்குவதற்கு தோட்டாக்களைப் பயன்படுத்தாமல் மக்கள் பக்கம் நின்ற முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்கு தேவையான நடவடிக்கையை முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேற்கொள்ளவில்லை என அவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சவேந்திர சில்வா நடவடிக்கை எடுக்காததால்தான் அவர் விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது, எனவே, நீங்களும் அவ்வாறு இருக்கவேண்டாம் என மற்றைய தரப்புகளுக்கு எச்சரிக்கை விடுக்கவே அவருக்கு எதிராக நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.
சவேந்திர சில்வா தொடர்பில் சில விடயங்களில் எமக்குப் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு அவர் தோட்டாக்களைப் பயன்படுத்தாமல் இருந்ததை மதிக்கின்றோம். மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்கு தோட்டாக்கள் பயன்படுத்தாமை தொடர்பில் சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, அவருக்கு தண்டனை வழங்கப்பட முயற்சி எடுக்கப்படுமானால் நாம் சவேந்திர சில்வாவின் பக்கம் நிற்போம். ஏனெனில் அன்று மக்கள் பக்கமே அவர் நின்றுள்ளார். இரத்த ஆறு ஓடுவதைத் தடுத்துள்ளார் - என்றார். (ம-44)

# இலங்கைக்கு உணவூட்ட 6.6. மில்லியன் டொலர்!

## ஜப்பான் வழங்குகின்றது

கொழும்பு, மார்ச் 12
இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக அவசரகால உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவியாக ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக 6.6 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.
இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிகொசி ஹிதேகி இதுதொடர்பில் தெரிவித்ததாவது:
இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை இன்னும் அதிகளவில் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் அண்மைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.
ஒவ்வொரு 10 குடும்பங்களிலும் 7 பேர், புரதம் மற்றும் பால் போன்ற சத்தான உணவைக் குறைப்பது அல்லது உணவை முற்றிலுமாகத் தவிர்ப்பது போன்ற நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இலங்கைக்கு ஜப்பான் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீண்டகாலமாக நன்கொடை அளித்து வருகிறது. அதேநேரம் நாட்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நீண்டகால மீட்பு மற்றும் மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது. இதன் தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக 6.6 மில்லியன் அமெரிக்க டொலரை ஜப்பான் வழங்கவுள்ளது.
இலங்கையில் கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி தொடங்கியதில் இருந்து ஜப்பான் அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் மூலம் இதுவரை 10 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# பெரமுனவின் தவிசாளராக சிவில் பிரதிநிதியொருவர்!

கொழும்பு, மார்ச் 12
கட்சியின் தவிசாளர் பதவிக்கு அரசியல் சார்பற்ற சிவில் சமூக பிரதிநிதியொருவரை நியமிப்பது தொடர்பில் பொதுஜன பெரமுன ஆராய்ந்துவருகின்றது.
இதுதொடர்பில் பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது:
கட்சியின் தவிசாளர் பதவிக்கு அரசியல் சார்பற்ற சிவில் சமூக பிரதிநிதியொருவரை நியமிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், தவிசாளர் பதவிக்கு மேலும் பல வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-44)



# பொருளாதாரம் பலப்பட முன் தேர்தல்களுக்கு இடமில்லை!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12
'நாட்டின் பொருளாதாரம் பலமடைந்த பின்னரே எந்தத் தேர்தலையும் நடத்துவோம். இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'தற்போதைய நெருக்கடியான நிலையில் உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலை நடத்தினால் அரசியல் கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. பொருளாதாரப் பாதிப்பு மீண்டும் தீவிரமடையும் என்பதை எதிர்த்தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.
பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டதன் பின்னரே எந்தத் தேர்தலையும் நாம் நடத்துவோம். அரசமைப்பு, சட்டம் ஆகியவற்றை விடவும் நாட்டுமக்களின் உயிர்வாழும் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை அரசு செயற்படுத்துகின்றது.
குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு எதிர்த்தரப்பினர் தற்போது போராட்டங்களைத் தீவிரப்படுத்தியுள்ளார்கள்.
தொழிற்சங்கப் போராட்டத்தால் அரசியல் ரீதியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. எனவே, பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடையாக மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.
இதேவேளை, பெரமுன தலைமையிலான அரசு முன்னெடுத்த தவறான பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை நாம் அன்றும் கூறினோம். இன்றும் கூறுகின்றோம். என்றும் கூறுவோம். பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தபோது அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுமாறு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுத்தார். ஆனால், எந்த எதிர்க்கட்சிகளும் அரசைப் பொறுப்பேற்கவில்லை.
நாடு எதிர்கொண்ட மோசமான நெருக்கடியைக் கருத்திற்கொண்டு தனிநபராக இருந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக அரசைப் பொறுப்பேற்றார்.
கடந்த ஆறு மாத காலத்தில் அவர் எடுத்த கடுமையான தீர்மானங்களால் நாடு தற்போது இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளது. நாட்டு மக்களும் நிம்மதியாக இருக்கின்றார்கள்.
எங்களின் எதிர்கால அரசியல் எவ்வாறு இருக்கும் என்பதைக் கணித்துக்கொண்டு ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசில் நாம் ஒன்றிணையவில்லை.
நாட்டுமக்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு அரசுடன் ஒன்றிணைந்து தற்போது நாம் வெற்றிபெற்றுள்ளோம் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிதண்ணீர் இன்றி கண்ணகிநகர் மக்கள் தவிப்பு

## தீர்வு வழங்குமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 12**

**கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள கண்ணகி நகர் கிராமத்தில் 450 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், தமது கிராமத்தில் சுத்தமான குடிதண்ணீர் இன்றி தாம் பெருமளவில் பாதிக்கப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் கடற்றொழில் மற்றும் விவசாயத்தை வாழ்வாதாரமாக மேற்கொண்டுவரும் நிலையில் எமது நாளாந்த தேவைக்காக சுத்தமான தண்ணீரைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றோம். எமது பகுதிகளில் சுத்தமான தண்ணீர் பெறக்கூடிய நிலையில் மூன்று கிணறுகளே உள்ளன. அவை தனியார் காணியில் அமைந்துள்ளன. அந்தக் கிணறுகளில் இருந்தே எமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுகின்றோம். இதற்காக நீண்டதூரம் பயணப்பட வேண்டியுள்ளது. நாள்தோறும் இதுவே சிலருக்கு வேலையாக உள்ளது.

கிராமத்திலுள்ள எமது கிணறுகளில் உள்ள தண்ணீர் எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத நிலையில் மஞ்சள் நிறக் காவியாகக் காணப்படுகின்றது. ஆடைகள் கழுவும்போதுகூட உடனே மஞ்சள் நிறமாக மாறி விடுகின்றது. இதன்காரணமாக பாடசாலை மாணவர்கள், சிறியவர்கள், முதியவர்கள் எனப் பலரும் குளிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் தண்ணீரைப் பெறவேண்டுமாயின் அருகிலுள்ள குளங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கிராமஅலுவலர் ஊடாக நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று எமது கிராமத்துக்கு வழங்கப்பட்டது. அந்த இயந்திரத்தை இன்று வரை பயன்படுத்த முடியாத நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு இயந்திரத்தைப் பொருத்துவதற்கான தளம் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் சுத்திகரிப்பு இயந்திரம் இருந்தும் சுத்தமான தண்ணீரைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பகுதிக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ம-14,113)

# மாநகரசபையின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி மாநகர சபையின் நடமாடும் சேவை எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை தட்டாதெருச் சந்திக்கு அருகாமையிலுள்ள கலாஜோதி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 1, 2 மற்றும் 9ஆம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம், சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி. போன்றவற்றைப் பெற்று யாழ். மாநகரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியை முழுமையாகச் செலுத்தும் பட்சத்தில் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 வீதக் கழிவைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-14)

## வெற்றிக்கொடி...

நாளில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி கடும் போராட்டத்தை வெளிப்படுத்தியது. கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் இன்னிங்ஸில் 279 ஓட்டங்களை அந்த அணி பெற்றுக்கொண்டது.

பதிலளித்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 127 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 152 ஓட்டங்களைக் கடக்க வேண்டிய கட்டாயத்தில் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் அணி இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடையும்போது 7 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மேலும் 15 ஓட்டங்களைப் பெற்றாலே இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க முடியும் என்ற நிலையில் நேற்றைய மூன்றாம் நாளின் ஆரம்பத்திலேயே தனது எட்டாவது இலக்கை இழந்தது. அதன்பின்னர் 9 ஆவது இலக்குக்கு 20 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டு இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது. இறுதியில் 160 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மத்திய கல்லூரி சார்பில் நியூட்டன் மற்றும் பரிதி ஆகியோர் தலா 5 இலக்குகளைக் கைப்பற்றினர். 9 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியை இலகுவாகப் பெறலாம் என்ற நிலையில் மத்திய கல்லூரி களமிறங்கினாலும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பந்து வீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்து ஓர் இலக்கைக் கைப்பற்றினர். இறுதியில் 4ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மேலதிக இலக்கு இழப்பின்றி வெற்றியை மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது. (அ-ஓ,5)





# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், கவனமாக இருக்கவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம் :** உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டாகும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபட உகந்த நாள். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** கலகலப்பான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்.

**மகரம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். பணம் இருப்பதால் உற்சாகமாகவே இருப்பீர்கள்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

# வீட்டிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 12

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் 8ஆம் கட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 30 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தூக்கிலிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு

▲Accountant

▲Gender:- Male / Female


▲Qualification:- Chartered Accountant அல்லது அதற்கு இணையானகற்கை நெறி முடித்த குறைந்தது இரண்டு வருடங்கள் அனுபவமுள்ளவர்கள்தகுதியானவர்கள் மட்டும் CV ஐ Whatsapp ஊடாக அனுப்பவும்.

(குயவு செய்து Call பண்ண வேண்டாம்) 077 774 3578

(CS 23878)(5/6)

# பிரமந்தனாறுப் பகுதிக்குள் யானைகள் அச்சுறுத்தல்

### வாழ்வாதாரமும் அழிகின்றது என அந்தப்பகுதி மக்கள் கவலை



**கிளிநொச்சி, மார்ச் 12**

**கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதிக்குள் காட்டு யானைகள் இரவு வேளைகளில் நுழைந்து அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. அத்துடன் வாழ்வாதாரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட தென்னைகளையும் நாசமாக்கியுள்ளன என்று பிரமந்தனாறு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

பிரமந்தனாறுப் பகுதிக்குள் கடந்த வியாழக்கிழமை நுழைந்த காட்டு யானைகள், ஒருவரது காணியில் சுமார் 14 க்கும் மேற்பட்ட தென்னைகளை அழித்துள்ளது.

அதனையடுத்து பிரதேசமக்கள் ஒன்றிணைந்து யானைகளைத் துரத்தியுள்ளனர். எனினும் மீண்டும் மீண்டும் யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து அச்சுறுத்தல் விடுக்கின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருமாத காலமாக தமது பகுதிக்குள் நுழைந்து பயிர்களை சேதமாக்கியுள்ளன என்றும் இதனால் தமது வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கின்றனர்.

எனவே யானைகள் குடியிருப்புகளுக்குள் நுழையாத வகையில் வேலிகள் அமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,113)

## கியூ.ஆர். குறியீட்டின் கீழ் நலன்புரிக் கொடுப்பனவு

### யாழில் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

அரசாங்கத்தால் வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவு பெறுபவர்களை கியூ.ஆர். குறியீடு முறைமையின் கீழ் ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் ஈடுபட்டுள்ளன.

நலன்புரி மானியங்களை வழங்குவதற்குத் தகுதியானவர்களை கண்டறியும் புதிய வேலைத் திட்டத்துக்கு கியூ.ஆர்.முறைமையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு, விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு போன்ற அரச உதவித் திட்டக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் இந்த கியூ.ஆர்.குறியீட்டின் கீழ் கொண்டுவரப்படவுள்ளனர்.

இதற்காக குறித்த கொடுப்பனவுகளை பெறுகின்ற குடும்பங்களின் விவரங்களைத் திரட்டும் பணியில் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ச-17)



## முல்லைத்தீவு விவசாயிகளுக்கு மானிய எரிபொருள் விநியோகம்

முல்லைத்தீவு, மார்ச் 12

அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய எரிபொருள் முல்லைத்தீவு மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக இந்த மானிய எரி பொருள் விநியோகிக்கப்படுகிறது.

டோக்கன் அடிப்படையில் 2.5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 6 லீற்றர் வீதம் டீசல் வழங்கப்படுகிறது.

இதேவேளை வயலை உழுவதற்கு ஏக்கருக்கு 15 லீற்றர் தேவைப்படும் நிலையில் மானியமாக வழங்கப்படும் குறித்த டீசலின் அளவு போதுமானதாக இல்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-19)

## சைவத் தொன்மங்கள் அழிப்பு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலே!

### சர்வதேச இந்து இளைஞர் பேரவை தலைவர் வேதனை

வவுனியா, மார்ச் 12

சைவ ஆலயங்கள் அண்மைக்காலமாக என்றுமில்லாதளவில் தொடர்ந்து அழிக்கப்படுவதுடன் அவற்றின் புனருத்தாரணங்கள் நிறுத்தப்படுகின்றமை திட்டமிட்ட ஒரு நிரலுக்கு அமைவாகவே நடைபெறுகின்றது. எம் இனமும் மதமும், எப்பொழுதும் குன்றிலிட்ட தீபம் போல் உண்மையை உரத்துச் சொல்லும். இவ்வாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

அண்மைக்காலமாக சைவ ஆலயங்களின் வரலாற்று அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்ட ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இந்தச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. சைவர்களாகிய நாம் இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாது.

வெடுக்குநாறிமலை வழிபாட்டு அபிவிருத்திகள் நீதிமன்றால் தடுக்கப்பட்டுள்ள போதும் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி பொலிஸாரின் பாதுகாப்புடன் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டம் இன்னமும் தூங்கிக்கொண்டேயுள்ளது.

கீரிமலையில் போர்த்துக்கீசர் காலத்தில் இருந்தே கீரிமலை சிவன் ஆலயமானது அமைந்திருந்தமைக்கான சான்றுகள், வரலாறுகள் உண்டு. அதன் அருகே பாதாளங்கை எனப்படும் நன்னீர்க்கிணறும் அதன் அருகே சித்தர்களின் தியான மடமும் இருந்தன. அருகே சடையம்மாவின் சமாதியுடன் சடையம்மா மடம், நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் குருவின் சமாதி என்பனவும் அங்கே மிக நீண்ட காலமாக இருந்தன. அதேபோன்றே இங்கு பழமையான கதிரை ஆண்டவர் முருகன் ஆலயமும் இருந்தது.

இவ்வாறான ஆன்மிக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இது விடயத்தில் அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தலையிடாதுள்ளமை பெரும் வருத்தம் அளிக்கிறது.

தமிழர்கள் குறிப்பாக சைவத் தமிழர்கள் பல்வேறு இன, மத, ஒடுக்குதலுக்கு உட்பட்டு நாதியற்றவராய் நட்டாற்றில் விடப்பட்டவர் போல் உள்ளனர்.

ஆயினும் எம் இனமும் மதமும், எப்பொழுதும் குன்றிலிட்ட தீபம் போல் உண்மையை உரத்துச் சொல்லும். எம் வரலாற்று அடையாளங்கள் அழிக்கப்பட்டாலும் எம் இன, மத வரலாற்றில் எப்பொழுதும் அழியாது - என்றார். (ச-110)

### சாவ. நகரசபையின்

## 1 மில்லியன் நிதியில் வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி, மார்ச் 12

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 13 சிறிய வீதிகள். சாவகச்சேரி நகரசபையின் ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. சாவகச்சேரி நகரசபையின் கடந்த 2022 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மிகுதியாகக் காணப்பட்ட தொகையைச் செலவு செய்வது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற சபை அமர்வில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் 18 உறுப்பினர்களில் சில உறுப்பினர்களின் விட்டுக்கொடுப்பையடுத்து ஒரு மில்லியன் ரூபா நிதியில் 13 வீதிகளைப் புனரமைப்பதற்கு சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஒ-14,9)

### தமிழர்களின் உரிமையைப் பறிப்பதற்காக

## இராணுவத்துக்கு ஒதுக்கும் நிதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துக!

### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நிதியில்லை எனக் கூறும் அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் உரிமைகளை திட்டமிட்டு அழிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு நடத்துங்கள்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன. நாட்டில் மக்களாணை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. தேர்தலை நடத்த நிதி இல்லை என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் உரிமைகளை திட்டமிட்டு அழித்து சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதற்காக செயற்படும் இராணுவம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய தரப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை தேர்தலுக்கு ஒதுக்கி தேர்தலை நடத்துங்கள்.

தற்போதைய சூழலில் தேர்தல் இடம்பெற்றால் ரணில் - ராஜபக்சக்கள் படுதோல்வி அடைவார்கள். சிங்கள மக்களே அவர்களைப் புறக்கணிப்பர். அதன் காரணமாகவே சர்வதேசத்தையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் வகையில் அரசாங்கம் நாடகம் புரிகின்றது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் யாழ்ப்பாணத்திலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர்களுக்கான கௌரவிப்பும் இதன்போது இடம்பெற்றது. (ய-27)



# பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்குக

## மகளிர் தினத்தில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 12
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் மகளிர் தினமான அண்மையில் பெண்களுக்கான உரிமை - பாதுகாப்பை வலியுறுத்தி, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தால் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.
பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தற்போது அதிகரித்துவருகின்றது. பெண்கள் வன்முறைகளிலிருந்து மீட்கப்படவேண்டும்.
அதற்கமைய ஒவ்வொரு பொது அமைப்புக்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவ பங்கேற்பு அதிகரிக்கவேண்டும். பெண்கள் தங்கள் கோரிக்கையை முன்வைக்கும் தளங்கள் உருவாக்கப்படவேண்டும்.
அரசியலிலும் பெண்கள் பிரதிநிதித்துவம் 5 வீதமாக இருக்கவேண்டும். பெண்கள், சிறுவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கவனவீர்ப்பில் வலியுறுத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. (ச-19)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் வரலாற்றுத்துறையினரால், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வு வரலாற்றுத்துறையின் தலைவர் பேராசிரியர் க.அருந்தவராஜா தலைமையில், கைலாசபதி கலையரங்கில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ய-125)

முத்தமிழ் கல்விக்கழக மாணவர்களின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு முத்தமிழ் கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் மகளிரின் பெருமை பற்றிய கருத்துரை மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (ய)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசகிராம அபிவிருத்திச்சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தினம் அதன் தலைவர் தி.வரதராசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
இதன்போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரவெட்டி கிளை நிதி பங்களிப்பில் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் திருமதி ஜெயபாரதி குழுவினருடைய வயலின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. (ய-27)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சால் 'அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்' எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹொட்டலில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் மாவட்ட மட்ட ரீதியாக இடம்பெற்ற சிறந்த தொழில் முயற்சியாளர்கள் தெரிவில் மன்னார் மாவட்டத்திலிருந்து பேசாலையைச் சேர்ந்த மஞ்சுளா சற்குணராஜா தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக்கேடயம், 50ஆயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (ய-60)




# சர்வதேச மகளிர் தினம்

சாவகச்சேரி, மார்ச் 12
சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 25ஆவது சர்வதேச மகளிர் தின விழா, சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களாக அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் சுவேந்ரா சுதாகர் கலந்துகொண்டார். (ஒ-14-9)






சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிரதேசசெயலகத்தின் பெண் அலுவலர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, பிரதேசசெயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ஒ-14-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கிரிக்கெட் ஒரு பொதுமொழி!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போர் மற்றும் வீரர்களின் போர், நண்பர்களின் போர், வன்னியின் போர் என பாடசாலைகளுக்கு இடையிலான 'கிரிக்கெட் பருவகாலமாக' அண்மைய வாரங்கள் அமைந்திருக்கின்றன. பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுக் கட்டமைப்பை தளம்பலற்ற வகையில் பேணுவதற்கும், சுயபரீசிலனைகளில் ஈடுபடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் இந்தப் 'போர்கள்' அவசியமானவையாகவும் தவிர்க்கமுடியாதவையாகவும் இருக்கின்றன, அதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்தக் கிரிக்கெட் ஆட்டங்கள் பாடசாலைகளின் ஆண்கள் அணிகளுக்கு மட்டுமானவையா? பெண்கள் அணிகள் எப்போதுதான் இந்தக் கிரிக்கெட் போர்களில் ஈடுபடப்போகின்றன? என்ற கேள்விக்குரிய பதிலைத் தேட வேண்டிய கட்டாயத்தில் வடக்குப் பாடசாலைகளும் உள்ளகக் கிரிக்கெட் கட்டமைப்பும் இருக்கின்றன.


கிரிக்கெட் ஆட்டங்கள் ஆண்களுக்குரித்தானவை என்ற எண்ணப்பாடு இருந்தகாலம் என்றோ இறந்து புதைந்து விட்டது. இன்று 'கிரிக்கெட்' என்பது பால்நிலைகள் கடந்த ஒரு பொதுமொழி. அவுஸ்திரேலியாவுக்கு பெர்ரி, இங்கிலாந்துக்கு ரெய்லர், இந்தியாவுக்கு மந்தானா, இலங்கைக்கு சாமரி அத்தப்பத்து என்று பெயர் சொல்லி வீராங்கனைகளை அடையாளப்படுத்தும் காலமிது. அந்தளவுக்கு உலகம் இன்று பெண்கள் கிரிக்கெட்டை ஏற்றுக் கொண்டதுடன் அதை இரசிக்கவும் தலைப்பட்டுள்ளது. ஆனால், வடமாகாண பெண்கள் கிரிக்கெட் கட்டமைப்பும் பாடசாலைப் பெண்கள் கிரிக்கெட் அணிகளும் இன்னமும் மேம்படுத்தப்பட்டபாடில்லை. மாறாத மந்தமான வினைத்திறனுடன் ஒரே வட்டத்தைச் சுற்றிச்சுற்றித் தான் இந்தச் செயற்பாடுகள் வலம்வந்தபடி இருக்கின்றன.

இந்த மாற்றத்துக்கான புதிய தேடலாகவும் பெரும் பாய்ச்சலாகவும் பாடசாலை பெண்கள் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போர்கள் நடத்தப்படவேண்டும். ஆண்கள் அணிகளுக்கு இடையிலான மோதல்கள் 'வடக்கின் போர்', 'பொன் அணிகளின் போர்' என்று பெயர்சொல்லி அடையாளப்படுத்தப்படுவதைப் போன்று பெண்கள் அணிகளுக்கு இடையிலான மோதல்களும் பெயர் சொல்லி அடையாளப்படுத்தப்படவேண்டும். இந்த மாற்றம் இலங்கைக்கே ஒரு முன்னுதாரண மாற்றமாக நிச்சயம் இருக்கும். வடக்கில் நூற்றாண்டுகாலப் பழமையையும் பாரம்பரியத்தையும் கொண்ட எத்தனையோ பெண்கள் பாடசாலைகள் உள்ளன. உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். இந்தப் பாடசாலைகள் இந்தப் புதிய வரலாற்றுக்கான தொடக்கத்தை சாதகமாகப் பரிசீலிக்கவேண்டும்.

ஆண்களைப் போன்று பெண்களால் (பாடசாலை மாணவிகளால்) இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக வெயிலுக்குள் நின்று விளையாட முடியுமா? என்ற கேள்வி உங்களில் பலருக்கும் எழலாம். ஒப்பீட்டளவில் ஆண்களைவிடவும் பெண்கள் உடல்வலு குறைந்தவர்கள்தான், அது படைப்பின் இயல்பு. ஆனால், அதைச் சரிசெய்யக்கூடிய மாற்றுத் திட்டங்களை நாம் கைக்கொள்ளலாம். ஆண்கள் கிரிக்கெட்டில் ஒரு நாளில் 90 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படுகின்றன. இதை பெண்கள் கிரிக்கெட்டில் 75 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கலாம் அல்லது இரண்டு நாள்களாக அல்லாமல் ஒன்றரை நாள்கள் கொண்டதாக ஆட்டத்தை மாற்றியமைக்கலாம். பெண்களுக்கு இடையிலான கிரிக்கெட் போரை நடத்துவது என்று முடிவெடுத்துவிட்டால் அதைச் சாதகமாகப் பரிசீலிக்க ஆயிரம் வழிகள் உள்ளன. செயற்படுத்துவார்களா எம்நிர்வாகிகள்?

நாளொரு நல்வார்த்தை

"இன்றும் நான் சாதித்து விட்டேன் என்று சொல்லத் துணிவு இல்லை. நான் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் கற்றல் எல்லையற்றது." – புரூஸ் லீ




# பிரதமர் தினேஷுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஐக்கிய மக்கள் சக்தி பரிசீலனை

**கொழும்பு, மார்ச் 12**

**பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்துவருகின்றதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

உள்ளாட்சிசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரச அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளாட்சிசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்பதை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன விடுத்திருந்த சுற்றறிக்கை அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அமைச்சரவை எடுத்த முடிவின் பிரகாரமே இந்த அறிவிப்பு வெளியானது எனவும் கூறப்பட்டது.

பின்னர் அமைச்சரவை அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை எனக் கூறப்பட்டது. சுற்றறிக்கையும் மீளப்பெறப்பட்டது. எனவே, தேர்தலைக் குழப்புவதற்கு தனது செயலாளரை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகச் செயற்படும் பிரதமருக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் கலந்துரையாடிவருகின்றார் என தெரியவருகின்றது. (ம-44)

# போராட்டங்களை அடக்குவதற்காக அரசாங்கம் மிருகத்தனச் செயற்பாடு

## சஜித் கண்டனம்

கொழும்பு, மார்ச் 12

அரசின் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் மற்றும் மிருகத்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் நடத்தப்பட்ட கண்ணீர்ப் புகைத் தாக்குதல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கண்ணீர்ப்புகைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான மற்றும் பரிதாபகரமான நிலை. இது அரசின் வன்முறைத் தன்மையை வெளிப்படுத்துகின்றது - என்றார். (ம-22)

நாளை 13.03.2023 திங்கட்கிழமை மாசி 29

சுபநேரம் : 12.22 - 01.52

ராகுகாலம் : 07.52 - 09.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வேலையாட்கள் தேவை

"MEDI HELP" CARE HOME வேலைக்கு (CARE GIVERS) வேலை யாட்கள் தேவை. பெண்கள் வயது 18 - 35 வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறக் கூடிய சேவைச் சான்றிதழ் ஒரு வருட பூர்த்தியில் வழங்கப் படும். உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் தகுதிக்கேற்ப

கொழும்பு – யாழ்ப்பாணம். (ACOCS 23808)(3/6)

தொடர்பு :
076 293 8404, 077 712 6860

## விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road க்கு அருகாமையில் Land Side இல் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் Apartement இல் 2Bed room 3 Bed room வீடு விற்பனைக்குண்டு. (ACOCS 23809)(3/6)

தொடர்பு : 076 290 1111

## தேவை

கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றிற்கு விற்பனை பிரதி நிதி தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 076 119 0267

## விற்பனைக்குண்டு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கும் வரணி மத்திய கல்லூரிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள தென்னங்காணி நி.பரப்பு 44 விற்பனைக்குண்டு.

077 666 9953

## மணமகள் தேவை

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட யாழிந்து (V) 1991 பரணி (பாவம் 19) மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் MSC முடித்தவரும், அரச நிறுவனத்தில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு வயது 25 - 30 ற்குள் படித்த தொழில்புரியும் மணமகள் தேவை. (ACOCS 23806)(3/6)

தொடர்பு : 077 141 6610

## விற்பனைக்கு

கொழும்பு 13 ஜெம்பெட்டாதெரு அண்மையில் Renovate செய்யப்பட்ட 600 sq வீடு 2வது மாடியில் சகல வசதிகளுடன் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. (ACOCS 23802)(3/6)

தொடர்பு : 075 8000 966

## வாடகைக்குத் தேவை

ஓய்வுபெற்ற வைத்தியருக்கு யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூர சுற்று வட்டாரத்தில் இணைந்த குளியல் அறையுடன் கூடிய இரு அறைகள் சமையல் அறை கொண்ட அனெக்ஸ் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. இந்த வசதியுடனான அனெக்ஸ் இருப்பின் **077 765 0666** எனும் இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (CS/7379)4,6

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப(V) 1976 இல் பிறந்த விஞ்ஞானப் பட்டதாரி அரச உத்தி யோக திருமணமாகாத மணமகனுக்குப் படித்த தகுந்த நற்குணமுள்ள திருமண மாகாத மணமகள் தேவை. (CR 1131)(3/6)

தொடர்பு : 076 667 8996

## வேலைவாய்ப்பு

Ileesha Tours (PVT) Ltd.
இனால் France நாட்டுக்கான 2 வருட Work Permit பெற்றுத் தரப்படும்.
தங்குமிடம் /Medical இலவசம்

071 067 1189
தெஹிவளை (ACOCS 23807)(3/6)

## உடனடியாக பணியில் சேர்வதற்காக நேர்காணல்

இலங்கையில் கட்டுமான துறையில் முதன்மை வகிக்கின்ற நிறுவனம் ஒன்றிற்கு கிளிநொச்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நீர்வழங்கல் திட்டத்துக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தேர்ச்சி மிக்க வேலையாட்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. தச்சு வேலையாட்கள்
2. மேசன்கள்
3. வேலையாட்கள்

கவர்ச்சிகரமான சம்பளம், மேலதிக நேர வேலைப்பணம் மேலும் வருகை ஒழுக்கத்திக்கான கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

**உடனே அழையுங்கள்**

திரு. பெரேரா : 077 352 5163
திரு. குணபரன் : 077 978 0272

## வாடகைக்கு

நல்லூரில் அமைந்துள்ள திருவாசகம் முதியோர் இல்லத்தில் இணைந்த குளியலறை வசதியுடன் கூடிய அறைகளும் தனி அறைகளும் வாடகைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்:

**திருவாசகம் முதியோர் இல்லம்**
**இல.89, செட்டி தெரு, நல்லூர்.**

தொடர்பு: 075 585 1174
001 647 856 1535
+ 447 495 890 204

## மாடி வீடு விற்பனைக்குண்டு

தமிழர்கள் செறிந்து வாழும் மொரட்டுவ சொய்சாபுரத்துக்கு அருகில் உள்ள லக்ஷபதியில், காலி வீதியில் இருந்து 400 மீட்டர் தொலைவில் சுற்று மதிலுடன் கூடிய 10 பேர்ச் நிலப்பரப்பில் எனக்குச்சொந்தமான சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி வீடு விற்பகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: டாக்டர் சிவகுமார்

071 444 5561

## வெள்ளவத்தையில்

தொடர்மாடி மனைகள் விற்பனைக்கு

10 Stories / 2-4 Luxurious Apartments Rooftop Swimming Pool & Many More...

LUXURY CONDO FOR SALE

ROYAL-T

PROPERTY VALUATION & ESTIMATE
PROPERTY RENOVATION
2D & 3D DESIGN
PROPERTY MANAGEMENT

Construction for Houses, Apartments & Commercial Building

ONE STOP - SHOP FOR ALL YOUR CONSTRUCTION NEEDS

500,000 LKR Reservation
35% Down Payment
Bank Loan Available

No.26, IBC Road, Colombo 06
No: 94-2/1, Galle Road, Colombo-06 (Next to HNB, Wellawatte)
E: info@royalt.lk
W: www.royalt.lk

TP : 077 522 2613

## Unicom SD Training Centre



# WEARE HIRING
## Administrator
## IN JAFFNA

The Training Centre Administrator is responsible for overseeing the day - to - day operations of the training centre, ensuring that all activities are carried out in an efficient and effective manner. This includes managing the centre, promoting the centre among the community, developing policies and procedures and promoting a positive learning environment for students.

### Key Responsibilities

- Manage the training centre including administration, making decisions with the management, and allocating resources appropriately.
- Manage relationships with internal parties, trainers, and community stakeholders including running marketing and promotional campaigns for the centre.
- Support in developing policies and procedures for the training centre, ensuring compliance while maintaining required standards.
- Oversee student enrolment and ensure that all students receive a quality education.
- Create and maintain a positive learning environment that supports student success.
- Oversee the maintenance of training centre facilities and equipment, ensuring that they are safe and well-maintained.
- Attend and participate in board meetings, providing updates and recommendations as needed.
- Submission of reports to management on the school as required.

### Qualifications

- Bachelor's degree in education, business, or a related field.
- At least 3 to 5 years of managerial experience in a school or a related institute.
- Strong leadership and management skills.
- Excellent communication skills in Tamil and English are compulsory.
- Excellent interpersonal skills.
- Knowledge of local regulations related to education and training will be an added advantage.
- Experience managing budgets and resources.
- Ability to work collaboratively with a diverse group of stakeholders.
- Should reside near Jaffna and be able to travel island wide on short notice.

**If your best fit for the above position, please forward your CV to jobs@unicomtechnology.co.uk indicating the position applied for on the subject line of the email.**

## Jaffna College - Vaddukoddai
## Vacancy – Cricket Coach

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above position.

**Applicants should**

- possess the minimum Level I qualification with 3 years' experience.
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics.
- be computer literate.
- be able to work with the college administration in developing cricket at Jaffna College.

**Closing date for applications 20.03.2023**

Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**

**Only short listed candidates will be called for an interview.**

(CR 39417)(3/6)

**Principal**

## வீடு விற்பனைக்கு



யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி. ஓட்டுமடப் பகுதியில் 1 பரப்பும் 3 குளியும் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

(CS 1147)1-6

077 12 97 209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும்

## ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மார்ச் 12**

**வடக்கிலிருந்து இராணுவம் முழுமையாக வெளியேற்றப்படவேண்டும் எனவும் வடக்கு வாழ் மக்கள் சந்தோசமாக வாழ்வதற்கு இது அடிப்படையானது என்றும் ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு வாழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் சந்தோசமாக வாழ்வதற்கும் வடக்கிலிருந்து இராணுவ வெளியேற்றம் மிகமிக அவசியமானது. வடக்கில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இரசாயன குண்டுவீச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது, இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்தவும் எப்படி ஒன்றித்து இருக்கின்றார்களோ அதேபோல அன்று மஹிந்தவும் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவும் ஒன்றித்துச் செயற்பட்டார்கள்.

இன்று பல்கலைக்கழக மாணவர்களினதும், சிங்கள மக்களினதும், தமிழ் மக்களினதும் வாக்குகளைப் பெறுவதற்காக கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் அனுரகுமார கூவித்திரிகின்றார். இன்று இவ்வாறு தெரிவிக்கும் இதே ஜே.வி.பி. அன்று தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல்களின்போது என்ன செய்தது?. தாம் சுத்தமானவர்கள் என்றும் விடுதலை வீரர்கள் என்றும் காட்டுவதற்காக ஜே.வி.பி.யினர் இன்று நாடகங்களை அரங்கேற்றுகின்றனர் - என்றார். (ம-125)

# தெல்லி. ஆதார மருத்துவமனைக்கு மருந்துப்பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஏழாலை களபாவோடை அம்மன் ஆலயத்தால், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகள் அண்மையில் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அனைத்து அரச மருத்துவமனைகளிலும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவந்தது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக புலம்பெயர்ந்தோர், பொது அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், இந்து அமைப்புகள் ஆலயங்கள் எனப் பல்வேறு துறையினர் மருத்துவமனைகளுக்கு ஒரு தொகை மருந்துகளை வழங்கி வருகின்றனர். அதனடிப்படையிலே தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மருத்துவமனையால் ஏழாலை களபாவோடை அம்மன் ஆலயத்துக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கோரிக்கைக்கமையவே ஆலயத்தின் 5 லட்சம் ரூபா நிதியில் ஒரு தொகை மருந்துகள் கையளிக்கப்பட்டன. (ம-14,125)



# உள்ளூர் உற்பத்திகள் விற்பனை நிலையம்

## மண்கும்பானில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வேலணைப் பிரதேசசெயலக விதாதா வள நிலைய நிர்வாகத்துக்குட்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை நிலையம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதி மண்கும்பானில் தொழிற்றுறைத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

விதாதா வள நிலையத் தொழில் முயற்சியாளர்கள் அமைப்பின் தலைவர் மகேஸ்வரநாதன் கிரிசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வேலணைப் பிரதேசசெயலர் க.சிவகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கிலும், ஆரோக்கிய உணவு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலும் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம-14,66)

# வவுனியா குடும்பத்தின் இறப்பு: உண்மையைக் கண்டறியுங்கள்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12

வவுனியாவில் இளம் குடும்பத்தினர் (கணவன், மனைவி மற்றும் அவர்களின் இரு பிள்ளைகள்) அண்மையில் சடலங்களாக மீட்கப்பட்ட நிலையில், அவர்களின் இறப்புக்கு என்ன காரணம் என்பது தொடர்பில் உண்மையைக் கண்டறியுமாறு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'வவுனியாவில் தந்தை, தாய் மற்றும் இரு பிள்ளைகள் உட்பட நால்வர் அடங்கிய குடும்பத்தினர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர். இவர்களின் மரணம் தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்கள் வருகின்றன. உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையும் இன்னும் முழுமையாக வரவில்லை. ஆகவே, இந்த மரணம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து உண்மையைப் பகிரங்கப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்கின்றோம்' - என்றார். (ம-22)

# ஜனநாயகவழிப் போராட்டங்கள் ஒடுக்கப்படுவதற்கு நீதிவேண்டும்

## ஐ.நா. அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 12

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த் முதலிகே உள்ளிட்டவர்களால் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:

ஜனநாயக உரிமைகள் கோரி அமைதிவழிப் போராட்டங்கள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம், தடியடி பிரயோகம் மேற்கொண்டு போராட்டக்காரர்களை அடக்கியொடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் ஐ.நா. கவனம் செலுத்தவேண்டும். ஜனநாயகப் போராட்டங்களின்போது பொலிஸாரின் கண்ணீர்ப்புகைத் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கு நீதிவேண்டும். அதேவேளை ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் உபயோகிக்கப்படும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் காலாவதியானவை என்றும், விஷத்தன்மையுடையவை என்று கூறப்படும் நிலையில் அது தொடர்பில் ஐ.நா. உடன் ஆராய்ந்து சட்டநடவடிக்கை எடுக்க வழிவகுக்கவேண்டும் - என்றனர். (ச-இ)

# காலாவதியான கண்ணீர்ப் புகைக்குண்டுகள் பயன்பாடு

## ஆய்வில் தகவல்

கொழும்பு, மார்ச் 12

பொருளாதார நெருக்கடிக்கு எதிராக நாட்டு மக்களால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தொடர்பில் சமூகம் மற்றும் அமைதிக்கான மையத்தின் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஆய்வுக்கமைய 2022 ஆம் ஆண்டில் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளும் உள்ளடங்குகின்றன. பொலிஸ் சேவைக்கு கண்ணீர்ப் புகை குண்டுகளை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்தபோது அவற்றின் உள்ளடக்கம் தொடர்பில் இரசாயன ஆய்வு கூட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 முதல் 2019 வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட 40 ஆயிரம் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தற்போது காலாவதியாகியுள்ளன.

கடந்த ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி வரை அவற்றில் 8 ஆயிரத்து 265 கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடுமையான நிதிநெருக்கடி காணப்பட்ட கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் ஜூலை வரையான காலப்பகுதிக்குள் பொலிஸார் 84 சந்தர்ப்பங்களில் 6 ஆயிரத்து 722 கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பயன்படுத்தியுள்ளனர். அவற்றின் பெறுமதி 26 மில்லியன் ரூபாவாகும்.

அதேவேளை துப்பாக்கிகளுக்கு அருகில் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தக்கூடாது என கண்ணீர்ப்புகைக் குண்டு தயாரிப்பு நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ள போதிலும், துப்பாக்கிகளுக்கு அருகிலேயே அதிகளவான கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம-இ)

# அரைவாசி அறுவடை முடிந்தும் அரசாங்கக் கொள்வனவு இல்லை

## மன்னார் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 12

மன்னார் மாவட்டத்தில் 50 சதவீத நெல் அறுவடை பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை என்று மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெற் செய்கை செய்யப்பட் பரப்பில் 50 வீத பரப்பின் அறுவடை பூர்த்தியாகியுள்ளது. இந்த மாத நிறைவில் அறுவடை பூர்த்தியாகும். மன்னார் மாவட்டத்தில் சம்பா, ஆட்டக்காரி, பெரிய நெல்லு, சிவப்பு நாடு ஆகிய நெற்பயிர்களே பயிரிடப்பட்டன. சம்பா நெல் வகையில் கீரிச்சம்பா அதிக அறுவடையை பெற்றுள்ளதோடு ஒரு மூடை 6 ஆயிரத்து 700 ரூபாவுக்கும் பெரிய நெல்லு, சிவப்பு நாடு, ஆட்டக்காரி ஆகியன 5 ஆயிரத்து 300 ரூபாவுக்கும் தனியார் நிறுவனங்கள் கொள்வனவு செய்கின்றன. எனினும் அரசாங்கக் கொள்வனவு இதுவரை இடம்பெறவில்லை - என்றார். (ம-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒருபரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக் காணிகள் விற்பனைக்குள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 656 3582**

(CS 23721)(3/6)

## ஓராண்டு நினைவுப் பூக்கள்

தாய் மடியில் 22.11.1975 — ஆண்டவன் அடியில் 12.03.2022



**அமரர் ந. மலர்விழி (மாலா)**


திதி:- மாசிமாத வளர்பிறை தசமி

அன்பின் உருவமே மாலா!
நீ அழிந்தாலும் அழியாது உன் நினைவலைகள்
ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே
காணும் இடமெல்லாம் உன் புன்னகை பூத்த
முகம் தோன்ற கண்கள் நிறைகின்றன
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே நீ எந்நாளும் உயிர் வாழ்கிறாய்
இனிய நினைவுகளையும் எங்கள் மன வேதனைகளையும்
இறுதி மூச்சுவரை நாம் சுமப்போம்
உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மணலாவத்தை, வதிரி, கரவெட்டி. — உன் பிரிவால் துயருறும் அம்மா மற்றும் சகோதரர்கள்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25.07.1935 — மறைவு 11.02.2023

கடந்த (11.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சின்னையா சிவசுந்தரம்**
**(சுந்தரம் பத்தர்)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (13.03.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு. (cs.23858) (2.6) — குடும்பத்தினர்

## இலவச கனடா விசா ஆலோசனை யாழ்ப்பாணத்தில்

மார்ச் 19 2023
**JETWING HOTEL JAFFNA**
37, Mahatma Gandhi Road.
நேரம்: காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை

**STUDENT VISA**
**SCHOOLING VISA WITH PARENTS**
Kids Age 6 to 17 Years | No Interview, No IELTS
**VISIT VISA** FAMILY / TOURIST BUSINESS
REJECTION VISA APPEAL & MANY MORE . . .
For inquires Call on 0777 761 346

flex Institute — Level 12, Parkland Building, 33 Park St, Colombo 2. www.flexinstitute.lk


P. Jegan
Director - Flex Institute

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். ஈச்சமோட்டை வீதியில், துரையப்பா ஒழுங்கையில் 4 பரப்பு காணியில் வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (CS 1098)(3/6)

**T.P : 074 130 4793**

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் அமைந்திருக்கும் வெண்பா புத்தக நிறுவனத்திற்கு நல்ல திறமையுள்ள பணியாளர்கள் தேவை.
புதிய சவால்களை ஏற்று இயங்கக்கூடியவராகவும்,கணிதத்தில் தேர்ச்சி, கம்பியூட்டர் பயன்பாடு மற்றும் ஆங்கிலப் பரீட்சயமும் உள்ளவராக இருக்க வேண்டும். புத்தக வாசிப்பு பழக்கம் இருப்பது மேலதிகத் தகுதியாகும்.
**ஆரம்ப ஊதியம் 30,000 ரூ** . தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றபடி ஊதிய அதிகரிப்பு உண்டு.
ஆர்வமுள்ளவர்கள், உங்கள் சுயவிபரக் கோவையை, உங்கள் புகைப்படத்தோடும் தொடர்பு இலக்கத்தோடும் மின்னஞ்சல் செய்யுங்கள்.
venpaabookhouse@gmail.com
**வெண்பா புத்தக நிறுவனம்.**
**No 20A Hindu College Road, Jaffna.**
யாழ் இந்துக்கல்லூரி மைதான நுழைவாயிலிற்கு எதிரில்.
தொடர்பு எண் 077 222 2616, இணையம் Venpaa.lkb
(CS 1133)(3/6)

## வேலையாட்கள் தேவை

No. 226, Main Street, Jaffna எனும் இடத்தில் இயங்கி வருகின்ற VV Mart and Construction க்கு உடனடி பணியாளர்கள் தேவை.
1) Assistant Manager (degree படித்தவர்கள்)
2) Clerk (O/L and A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது)
3) Sales Girls and Boys (O/L, A/L படித்தவர்கள்)
வயது எல்லை (21 - 35)
கட்டாயமாக சுய விபரக்கோவையுடன் வருகை தரவும்.
(CS 1138)(3/6)

**T.P : 077 555 2142 / 074 016 5425**

## காணி விற்பனைக்கு

ரவிகராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித்தீர்மானிக்கப்படும். (CS 23689)(3/6)

**T.P : 077 656 3582**

## கடை விற்பனைக்கு

**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், 8.8 குளி (4.96 Perch) கடை விற்பனைக்கு.**

- மானிப்பாய்வீதி, காங்கேசன்துறை வீதி சந்தியிலி ருந்து 150m தூரம் (வட மேற்கு திசையில்)
- மானிப்பாய் வீதி, சிவன் கோவில் வீதி சந்தியில் இருந்து 200m தூரம் (தென் கிழக்குத் திசையில்)
- நன்னீர் கிணறு உள்ளது.
- விலை நூற்று ஐம்பது லட்சம் ரூபா (150 Lakhs)

(CS/1145)4,6

**0768 622 286** (mobile) or **021 2222 133**
**+61 425 707 123** ( Whatsapp)

## வாடகைக்கு

அரைக்கும் ஆலை (Grinding Mill) வாடகைக்கு (குத்தகைக்கு) விடப்படும்.
தொடர்பு: **076 904 4235**

## நாள் வாடகைக்கு

யாழ் நகரில் 2 அறைகள், சமையல் அறை, குளியல் அறைகளுடன் தளபாட வசதிகளுடன் கூடிய வீடு நாள், கிழமை மாத வாடகைக்கு விடப்படும்.

**074 374 3767**

## வீடு வாடகைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. (CS 23874)(5/6)

தொடர்புகளுக்கு : **077 833 6848**

## வீடும் அறைகளும் வாடகைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் வீடும், தனியாக உள்ள இரு அறைகளும் வாடகைக்கு.

**077 033 9477**

## அறை வாடகைக்கு

நல்லூர் பகுதியில் பெண்கள் மட்டும் தங்குவதற்கு அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : **074 290 7577**

## விற்பனைக்கு

விளம்பரப்பலகை (LightBoard) லைட்போட் விற்பனைக்கு உண்டு.
நீளம் 30 அடி, உயரம் 4 அடி- 55,000
நீளம் 25 அடி, உயரம் 6 அடி-65,000
(CS 23870)(5/6) 071 089 9633

## தேவை / விற்பனைக்கு

பில்கிளாக், உதவியாளர், மாவறுத்தல், மில் அனுபவம் உள்ளவர்(1200) என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை. மில் பாவனைக் குரிய யக்காபான், அரிதட்டு மேலும் பல விற்பனைக்கு.
பிருந்தா மில், 184, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (CS 23873)(5/6) **077 174 6101**

## மணமகள் தேவை

06.12.1987 மிருகசீரிடம் 4 ஆம் பாதம் கிரகபாவம் 4, சிங்கப்பூர் பிரஜா உரிமையுள்ள - பொறியியலாளர் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (cs 23861) (2.6)

**077 724 0488**

## மணமகள் தேவை

1993 இல் பிறந்த ஜேர்மனியில் வசித்து வரும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) கிரகபாவம் - 21 3/4, கல்வி- ICT Software Engineer செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. (யாழ்ப்பாணம் அல்லது வெளிநாடு மட்டும் தொடர்புகொள்ளவும்.

**074 36 70 513**
**Whatsapp-072 16 29 825**
(CS 1105)1-6

## வீடு விற்பனைக்குண்டு வத்தளை

வத்தளை ஹெந்தளை சந்திக்கு மிக அருகில் பலகல்ல வீதியில் 22.5 பேர்சஸ் சதுரகாணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு,மற்றும் ஹெந்தளை வீதியில் நீர்கொழும்பு மெயின் வீதிக்கு மிக அருகாமையில் 47 பேர்சஸ் காணிஹோட்டல் தனியார் விடுதி மேலும் பல வியாபார தேவைக்கு பயன்படுத்தக்கூடிய வர்தக பாதையில் அமைந்துள்ள பெரியவீடு விற்பனைக்குண்டு

தொடர்பு
K.பத்மநாதன் **0777 317 838**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவிகளின் வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவிகளின் வருடாந்த ஒன்று கூடல், தந்தை செல்வா கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஓ.5)


## வெளிநாட்டில் உயர் கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு!



உயர் கல்வியை தொடரக்கூடிய அதி முன்னனி மிக்க நாடுகளின் பட்டியலில் **New Zealand, Australia, Canada, UK, USA, Ireland** மற்றும் **European** நாடுகளான **Sweden, Finland, Spain, Hungary and Romania** க்கும் அதி குறைந்த பாட நெறிக்கட்டனத்துடன் உயர் கல்வித் தகைமைகளை பெறலாம்.

**Why choose Beverley International?**

- Expert since 2007
- High success rate in Visas
- Assistance in admission for students
- Most trusted visa consultancy in the country
- Scholarship opportunities
- Financial Guidance

நேரில் சமூகமளித்து ஆலோசனைகளை பெற

**(Open day at Jaffna Branch) - 2023 மார்ச் 18**
**2023 மார்ச் 19 - யாழ் இந்துக் கல்லூரி (JAFFNA HINDU COLLEGE)**

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

**0777 284 029 | 0212 210 277 | 0706 697 660 | 0776 929 773**

**Beverley International**
Jaffna Office : No. 401, Clock Tower Road, Jaffna.
Head Office -
No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656



## வர்த்தகத்திற்கு வாடகைக்கு / குத்தகைக்கு

கோண்டாவில் மேற்கு K.K.S வீதியில் அமைந்துள்ள கட்டட தொகுதியுடன் கூடிய 41/2 பரப்புக்காணி வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு. வர்த்தகம், அலுவலகம், களஞ்சிய செயற்பாட்டிற்கு உகந்தது.

**075 087 3991, 071 792 6991**



## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

1) எழுதுவினைஞர் (Clerk)
2) கணக்கு எழுதுவினைஞர் (Accounts Clerk)

ஆர்வமுள்ளவர்கள் நாளை (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் வேலைவாய்ப்புக்கான ஆங்கிலம் 5 மாதக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தைப் பெற்று அல்லது https://ou.ac.lk/engforempol/ என்ற இணையத் தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஓ.14)


## யாழ். இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில்

# சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள்

G20 — भारत 2023 INDIA — सत्यमेव जयते — 75 Azadi Ka Amrit Mahotsav

**இந்திய துணைத் தூதரகம் யாழ்ப்பாணம் ஏற்பாடு செய்துள்ள**

# சிறப்பு பட்டிமன்றம்

**இளம் தலைமுறையை வழி நடத்த வேண்டிய பொறுப்பு...**

**பெற்றோருக்கே!** — **சமூகத்திற்கே!**

**நடுவர்**


செந்தமிழ் சொல்லருவி ச.சலீசன்


திரு.ந.விஜசுந்தரம்


இந்தியாவின் பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி கவிதா ஜவகர்


திருமதி மதன் கோசலை


செல்வி தயாளினி குமாரசாமி

காலம் : 14 மார்ச், 2023 நேரம் : மாலை 5.00 மணிக்கு
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்

सत्यमेव जयते — 75 Azadi Ka Amrit Mahotsav

**யாழ் . இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு இணைந்து நடாத்தும்**

**"பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்"**
**எனும் தொனிப்பொருளில்**

**நிகழ்வுகள்**




- பெண் தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக கண்காட்சியும் விற்பனையும்.
- மாகாண ரீதியில் சிறந்த பெண் சாதனையாளர்களைக் கௌரவித்தல்
- மாகாண ரீதியில் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களை கௌரவித்தல்
- சர்வதேச மகளிர் தின சிறப்புரை இந்தியாவின் பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி.கவிதா ஜவகர்
- சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் பற்றிய பார்வை - விபரணச்சித்திரம்

இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 15 மார்ச் 2023, 9.00 மணி முதல் 2.00 மணிவரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈழத்தின் பிரமாண்டமான நடராஜர்சிலை பிரதிஷ்டை

ஆனையிறவு தட்டுவன் கொட்டிசந்தியில் 27 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட நடராஜர் சிலை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. ஈழத்தின் மிகப் பிரமாண்டமான இந்தச் சிலை கரைச்சி பிரதேசசபையின் ஏற்பாட்டில் அமெரிக்க மற்றும் உள்ளூர் வர்த்தகர்களின் ஆதரவுடன் நிறுவப்படுகிறது.

(ச)

## விபத்தில் சாரதிக்கு மறியல்

யாழ். மார்ச் 12

நிலாவரைப் பகுதியில் துவிச்சக்கரவண்டி- டிப்பர் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில், டிப்பர் வாகனத்தின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனச் சாரதியை அச்சுவேலி பொலிஸார் கைதுசெய்து நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும் 1[illegible] ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

(ச-23)


# உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

CS 36443

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?. கணச்சூடா?. பலகீனமா?. ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?. மார்பு கூட வேண்டுமா?. உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**26.03.1956**

**மறைவு**
**02.03.2013**

## அமரர் செல்லத்துரை செல்வநாதன்

அன்பின் திருவுருவாய் குடும்பத் தலைவனாய்
மனம் நிறைந்த கணவராய் பாசமிகு தந்தையாய்
வாழ்ந்த எம் உத்தமரே!

அந்நிய தேசமதிலும் உங்கள் பிள்ளையெனும்
பெயர் சொல்ல வாழ்ந்தனே அப்பா
உங்கள் மறுவாழ்வு சாந்திபெற மனதார இறைஞ்சுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றென்றும் நினைவுகளுடன்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்**

**விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

# மரண அறிவித்தல்



## தம்பு இரத்தினசிங்கம்

**தோற்றம் 10.08.1945** **மறைவு 10.03.2023**

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இரத்தினசிங்கம் அவர்கள் கடந்த (10.03.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு. செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயகாந்தன் (மக்கள் வங்கி). ராஜ்குமார் (Ofnir Engineering Construction). ஜெயந்தினி. இராஜ்வதனன். காலஞ்சென்ற யசோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும். யாழினி (சமுர்த்தி). கவிதா. குகதாசன். ஜெமிலா. ஜெகசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியா. சரணுயா. ராகவி. சங்கவி. பிருந்தவி. டிலக்ஷனா. கீதாஞ்சலி. யசோதரன். கௌசிகா. கயன். அனோஜன். தனுசன். யதுசிகா. பிரதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 23854) (3/6)


# வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் பிரபல கணினி விற்பனை நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1) காசாளர் / வரவேற்பாளர் (பெண்)
2) விற்பனை உதவியாளர் (ஆண் / பெண்)
3) தொழில்நுட்பவியலாளர்கள் (Computer / CCTV)
4) தொழில்நுட்பவியலாளர்கள் (Electronics)

அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**மேலதிக விபரங்களுக்கு:**

**North Lead Technologies Pvt Ltd**
**No-253, Stanley Road, Jaffna**
**Contact: 077 419 2275, 077 253 3390**
**E-mail: northlead@gmail.com**

(CS 23683) (3/6)

# வீடு வாடகைக்குண்டு

மருதனார்மடம் சந்திக்கு அருகில் (ஏறக்குறைய 500 யார் தூரத்தில்) உடுவில் வீதியில் 4 பரப்புடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். மேல்மாடியில் 4 அறைகள், விறாந்தை, Hall, சமையல் அறை என்பனவும் கீழ் கட்டடத்தில் 3 அறைகள், Hall, விறாந்தை, சமையல் அறை என்பனவும், வாகனத் தரிப்பிடமும் காணப்படுகின்றது. 4 அட்டாச் பாத்றூம், வெளி பாத்றூம், மேல் மாடிக்கும் தனியான பாதை உண்டு. வங்கிகள், தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் தொடர்பு கொள்ளவும்.

**மனோகரன் (ராதா)**
**077 615 0211**

(CS 23859) (3/6)


# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**18 - 11 - 1938**



**இறப்பு**
**06 - 03 - 2023**

## செல்லையா இராமச்சந்திரன்

**(இளைப்பாறிய வைத்தியர்)**

யாழ். மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும். உரும்பிராய் வடக்கு. கொழும்பு வெள்ளவத்தை Frances Road, பிரித்தானியா லண்டன் Morden ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லையா இராமச்சந்திரன் அவர்கள் கடந்த (06.03. 2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும். காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா (உரும்பிராய்) தம்பதிகளின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற விக்னேஸ்வரி அவர்களின் பாசமிக கணவரும். சுமதி. ராஜ்குமார். ராஜி. தினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும். பகீரதன் (பகீர்). சுஜாதா ஆகியோரின் அன்பு மாமனாரும். பிரியங்கா. அரன். சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்ற இராசலிங்கம். மனோன்மணி. இராஜரத்தினம் மற்றும் நேசமணி (இலங்கை). இராஜேஸ்வரி (கனடா). பாலச்சந்திரன் (France). ரஞ்சினிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும். செல்வநாயகி. காலஞ்சென்ற வெற்றிவேலாயுதம். கருணாநிதி. மகாதேவன். அருணகிரிநாதன். கமலாம்பிகை மற்றும் உமேஷ் நாகேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.03.2023) புதன் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்,**
**சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.**

(CR 39428) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வலி.வடக்கு

## பிரதேசசபையின் நடமாடும்சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 12

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மயிலிட்டி உப அலுவலக பிரிவுக்குட்பட்ட 16 ஆம் வட்டார பொதுமக்களுக்கான நடமாடும் சேவைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி மற்றும் 16 ஆம் திகதி என இரு தினங்கள் நடைபெறவுள்ளன. அதன்படி ஜே/238, ஜே/239, ஜே/242, ஜே/243 ஆகிய பிரிவுகளுக்கு 15ஆம் திகதி புதன்கிழமை நடராசா ஞாபகார்த்த நூலகம், குரும்பசிட்டி கிழக்கிலும், 16ஆம் திகதி வியாழக்கிழமை அமுதசுரபிக்கோட்ட மண்டபம் நாச்சிமார் கோவிலடி கட்டுவன் மேற்கிலும் சேவைகள் நடைபெறவுள்ளன.

நடமாடும் சேவையில் சோலைவரி அறவீடு, ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளல், வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெற்றுக்கொள்ளல், துவிச்சக்கர வண்டி உரிமம் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட துறைகளில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-14)



வல்வெட்டித்துறை கிளை மக்கள் வங்கியில் சர்வதேச மகளிர் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் ஓய்வுநிலை பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி சரஸ்வதி சிவனருள்சுந்தரம் கலந்துகொண்டு சிறப்பித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையில் கடலாமை; ரூபா 30,000 தண்டம்

புங்குடுதீவு பகுதியில் கடலாமை வைத்திருந்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அழிந்து வரும் அரிய வகை உயிரினங்கள் பட்டியலில் உள்ள கடலாமை ஒன்றை உடைமையில் வைத்திருந்த நபருக்கு எதிராக வனஉயிரிகள் திணைக்களத்தால் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தண்டம் விதிக்கப்பட்டது.

(ம-14,23)


### வகுப்புக்கள்

தரம் 01 முதல் 08 வரையான மாணவர்களுக்கான அனைத்து பாடங்களுக்குமான வகுப்புக்கள் யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெறுகின்றன. (CS 23877)(5/6)

தொடர்புகளுக்கு: 077 839 5470


## மரண அறிவித்தல்



### சந்திரசேகரம்பிள்ளை புஸ்பநாதன்

தோற்றம் 27.10.1940 — மறைவு 10.03.2023

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, பழைய காளி கோவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை புஸ்பநாதன் அவர்கள் கடந்த (10.03.2023) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், இருபாலை V.H. லேனை சேர்ந்த காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக்கணவரும், சத்தியநாதன், குபேந்திரநாதன், கமலநாயகி (இந்தியா), கெங்கேஸ்வரி (UK) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வைத்தியர் குருநாதன் மற்றும் பூமகள், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், நிரஞ்சனா, ஹேமமாலினி, பிறேமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமுகன், பாலகுமார், குகதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியன், பிரணித்தா, சந்தியா, மிஷான்யா, சாகிதன், நிரயா, நிதர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(CS 23868) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 18 . 08 . 1985



மறைவு 29 . 01 . 2023

கடந்த (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் பாசமிகு இளைய புதல்வன்

### அமரர் சண்முகலிங்கம் பிரதாப்

**(உரிமையாளர் - வதனி ஜுவல்லறி, கொடிகாமம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (14.03.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)**

**பொற்கொல்லர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**077 800 2724**
**076 109 1915**

(CR 39433) 1-6

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை புவனேஸ்வரி

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வவுனியா, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேஸ்வரி அவர்கள் கடந்த (10.03.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும்; மனோன்மணி, இரத்தினம், சோதியம்மா, சதாசிவம் ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா மற்றும் ஜெயகுமார், வசந்தகுமார், சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் தேவகி, விஜயகுமாரி, பேபிசறோசனா, தேவகி ஆகியோரின் மாமியாரும், மைதிலி, சிவதர்சினி ஆகியோரின் அம்ம்ம்மாவும், வாதுஷன், பிரணவி, ஜஸ்வினி, கணவிகாஸ் ஆகியோரின் அப்பம்மாவும், கிருஷ்ஜிகாவின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CR 23826) (3/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

உ
திருச்சிற்றம்பலம்

## சிவப்பேறு குறித்த அறிவித்தல்

சிவபூமியில் 24 . 06 . 1934



சிவபுரத்தில் 07 . 03 . 2023

### திருமதி தெய்வேந்திரராணி வேலாயுதர்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி, கலாவேவா (இலங்கை), வெலிங்டன் நியூசிலாந்து, சிட்னி (துங்காவி) ஒசுத்திரேலியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வேந்திரராணி வேலாயுதர் (07.03.2023) செவ்வாய்க்கிழமை அன்று சிட்னியில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்(வாத்தியார்), செல்லம்மாவின் அன்பு மகளும், சரவணமுத்து, ஆச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு.வேலாயுதர் சரவணமுத்துவின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், பவானி, காலஞ்சென்ற சாந்தினி, யசோதினி, சிவகுமார், நந்தினி மற்றும் பாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்ரமணியம், தர்மகுலசிங்கம், யோகராஜா(விக்டர்), ஜெயதேவி, இந்திரன், நந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், கிரிசாந்தி, பாத்தீபன், கீர்த்திகன், ஏஞ்சலா, அஸ்வினி, ஆருனி, சேந்தன், சுவேதா, ஆரூரன், அஜந்தன், நிஷங்கா மற்றும் முகுந்தன், ஸ்டெவி, அருன், மெதுலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நவீனா, ஜஸ்வின், யோசான், ஜொகான் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற சற்குணபூபதி, மோகனலீலா, சௌந்தரலீலாவதி, தர்மலிங்கம், யோகாம்பிகை, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணேசு, குணரட்ணம் மற்றும் சுப்ரமணியம், புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான விமலாம்பிகை, பாலசிங்கம், அன்னமுத்து, இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் வீரகத்தி, செல்வரத்தினம் ஆகியோரின் சகலியுமாவார்.

அம்மாவின் பூதவுடல் (15.03.2023) புதன்கிழமை அன்று மக்கள் பார்வைக்காக 86 ராகோ வீதி, கிரவீனில் மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் (16.03.2023) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் மிஞ்சன்பெரி வடக்கு வழிபாட்டு இடத்தில். சிவப்பேற்று வழிபாடுகள் ஆரம்பமாகி மாலை 3.00 மணியளவில் பூதவுடல் தீயினில் சங்கமாக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

Viewing: 15th March 2023 6.00 PM to 8.00 PM at 86 Targo Road, Girraween, NSW 2145.
Cremation: 16th March 2023 1.00 PM to 3.00 PM at Pinegrove Memorial Park, North Chapel, Kington Street, Minchinbury NSW 2770

**பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.**

**தகவல்:**
**நந்தன் - மருமகன் - +61413895294**

(CS 23876) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன...

குந்தகம் விளைவிக்கவும் முடியாது. இவற்றை மீறி என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலுக்காக வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைத் தடுப்பதற்கு எதிராக நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை, நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல் என்று ஆளும்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தனர். இதனால் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் சுயாதீனத்திலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்திலும் ஆளும்கட்சி தலையீடு செய்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன.

இந்த விவகாரம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (அ-ஓ,5.22)

## யாழ்ப்பாண...

வறுமையான குடும்பப் பின்னணியிலிருந்து மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 23 வயதான மாணவனே பகிடிவதைக் கொடுமையால் இவ்வாறான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளான்.

சிரேஷ்ட மாணவர்கள் தினமும் இரவு 6 மணி தொடக்கம் 10 மணி வரையில் தொலைபேசியில் தங்களுடன் கதைக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளனர். அத்துடன் சிரேஷ்ட மாணவர்களுக்கு மரியாதை செலுத்துவேன் என்று ஆயிரம் தடவை எழுதித் தருமாறும் பணித்துள்ளனர். இவ்வாறான பகிடிவதைக் கொடுமைகளுக்கு மேலதிகமாக, விடுமுறையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சிரேஷ்ட மாணவர்கள் இருவர் இந்த மாணவனை அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லமாட்டேன் என்று வீட்டிலிருந்தவர்களிடம் மாணவன் தெரிவித்துள்ளான். வீட்டார் பல்கலைக்கழகத்துக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தியதையடுத்து யாருக்கும் தெரியாமல் வீட்டிலிருந்து மாணவன் வெளியேறிச் சென்றுள்ளான்.

காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் 2 நாள்களும், அதன் பின்னர் தெல்லிப்பழை பகுதியிலுள்ள பாழடைந்த வீட்டில் 2 நாள்கள் தனித்திருந்துள்ளான். பாழடைந்த வீட்டுக்கு அருகிலிருப்பவர்கள், மாணவன் தனித்து அங்கு தங்கியிருந்தமையைக் கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதற்கிடையில் வீட்டார், மாணவனைக் காணவில்லை என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்ட மாணவன் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

மாணவனது கழுத்திலும், கைகளிலும் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. விரக்தியில் அவ்வாறு செய்ததாக விசாரணைகளின்போது மாணவன் குறிப்பிட்டுள்ளான். இது தொடர்பில் உடனடியாகவே மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'பகிடிவதைக்கு உள்ளான மாணவன் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் தனித்திருந்த நிலையில் மீட்கப்பட்டான்' என்பதை உறுதிப்படுத்திய கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாணவன் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முயற்சிக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால், மருத்துவச் சோதனைகளில் மாணவன் அவ்வாறு முயற்சித்தமை கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்ப் பாண மாணவன் பகிடிவதை கொடுமை காரணமாக 1996ஆம் ஆண்டு உயிரிழந்தமையும், அதனையடுத்து கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிறவன்முறைகளைத் தடை செய்யும் 1998 ஆம் வருட, 20ஆம் இலக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் அடிப்படையில் பகிடிவதை தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது. (அ-ஓ,5,125)

## காலாவதி...

கடந்த வாரங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகள் காலாவதியானவையல்ல என்று பொலிஸ் பேச்சாளரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது பாதுகாப்புத் தரப்பினரால் காலாவதியானதும், இரசாயன செறிவுகள்கூடிய கண்ணீர்ப்புகை குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பகிரங்க விலை மனு கோரலின் அடிப்படையில், ஒழுங்கு முறைமையொன்றின் அடிப்படையிலேயே பொலிஸ் திணைக்களத்தினால் அவை கொள்வனவு செய்யப்படுகின்றன.

கடந்த ஆர்ப்பாட்டங்களின்போது உயிரிழந்ததாகக் கூறப்படுபவர்களின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெறவில்லை. உயிரிழப்புக்கான காரணம் குறிப்பிடப்படும் வரை அது தொடர்பில் எவ்விதக் கருத்துக்களையும் வெளியிட முடியாது - என்றார். (அ-ஓ,இ)

## ஒரேநாளில்...

ஒரு மணிக்கும் இடையிலேயே அவைகளவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலுக்கு அருகிலுள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவரது வெள்ளைநிற மோட்டார் சைக்கிள் திருடிச் செல்லப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவரே அதனை திருடிச் சென்றுள்ளனர். சி.சி.ரி.வி. கமராவில் அது தெளிவாகப் பதிவாகியுள்ளது. திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கமும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், திருடிச் சென்றவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்; விரைவில் அவர்களைப் பிடித்துவிடுவோமென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - சுன்னாகம், அச்சுவேலி, கோப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. ஒரு குழுவே இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தி, திருடர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (அ-ஓ,5)

## வசந்த...

இந்தக் குழுவினர் இன்று மு.ப. 11 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதனைத் தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தினரையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்புரிமையை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பெற்றிருக்காத நிலையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கொழும்பில் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கும் இந்தக் குழுவினர் திடீரென யாழ்ப்பாணம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,5)

## கடமைநேரத்தில்...

மதுபோதையில் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொலிஸார் இருவர், விபத்தை ஏற்படுத்திய டிப்பர் சாரதியை கைதுசெய்து அவரை சட்ட மருத்துவ அதிகாரியிடம் அழைத்துச் சென்றுள்ளனர். டிப்பர் வாகனச் சாரதி மது அருந்தியிருந்தாரா என மருத்துவ அறிக்கை பெறச்சென்ற பொலிஸார் இருவரும் மது அருந்தியுள்ளதை சட்ட மருத்துவ அதிகாரி தெரிந்துகொண்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்துமதுபோதையிலிருந்தபொலிஸ் அதிகாரிகள் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,5)

## போர்க்குற்றங்கள்...

ருக்கும் நடவடிக்கைகள் என்ன? என்று கேள்விகளைத் தொடுத்துள்ள ஐ.நா. வின் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு, மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் குறித்தும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரி [illegible] தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் இலங்கை தொடர்பான 6 ஆவது மீளாய்வுக் கூட்டத்தொடர் கடந்த 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் மேற்கொள்ளப்படும் அநாவசியமான தலையீடுகள், நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் நிறைவேற்றுதிகாரத்தின் பங்கு என்பன தொடர்பிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக் குழு தமது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக உள்நாட்டுப் போரின்போது இடம்பெயர்ந்தோரை மீள்குடியமர்த்துவதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டிய மீளாய்வுக்குழு உறுப்பினர்கள், இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த 92 சதவீதமான காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமையையும் வரவேற்றனர்.

இருப்பினும் அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு தண்டனை வழங்காதமை குறித்தும் அதிருப்தி வெளியிட்டுள்ளது. (அ-ஓ,இ)

## வாக்குச்சீட்டை...

ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்திருந்த நிலையில், வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான பணம் இதுவரை கிடைக்கவில்லை என்று அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

'வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான பணம் இல்லாத காரணத்தால் தபால்மூல வாக்குச் சீட்டை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது' என்று அரச அச்சம் தெரிவித்துள்ளது.

வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு செலவாகும் பணம் இதுவரை செலுத்தப்படாததால், அதற்கான பணிகளைத் தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அரச அச்சக அலுவலகத்தின் பிரதானி தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிட 152 மில்லியனும் ஊழியர்களின் கொடுப்பனவுக்காக 52 மில்லியன் ரூபாவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ,இ)


உடனடி வேலைவாய்ப்பு

விற்பனைப் பொறுப்பாளர்

(SALES INCHARGE)

கொழும்பை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்கிவரும் மீன்பிடி உற்பத்தி நிறுவனத்தின் கிளை நிறுவனமான பிரதானவீதி, மாதகலில் இயங்கி வரும் நிறுவனத்துக்கு விற்பனைப் பொறுப்பாளர் தேவை.

(ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

கல்வித் தகைமை :-

❖ க.பொ.த சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(மேலதிக தகைமை - க.பொ.த. உயர்தரம் தோற்றியிருத்தல் விரும்பத்தக்கது)
❖ கணினி அறிவு அடிப்படை (BASIC) விரும்பத்தக்கது.
❖ வயது :- 23 - 30
❖ அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

077 477 3488 / 077 959 8231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு
கிளிநொச்சியில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 451 1436
071 530 8336

## விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பலாலி விமானநிலையம் K.K.S துறைமுகம் என்பவற்றிலிருந்து 1500m தூரத்தில் 8, 10, 12 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு. (ACO CS 23809)(3/6)
தொடர்பு : 075 521 3533

## உதவி கோரல்
எனது மகள் ஆகிய ரா.சாயினி (வயது 10) சிறுநீரக நோயால் பாதிக்கப் பட்டுள்ளார். இவருக்கு அவசர சத்திர சிகிச்சை செய்ய வேண்டி உள்ளது. எமது குடும்பம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளது. அதனால் போதிய நிதி எம்மிடம் இல்லை. எனது பிள்ளையின் உயிரைக் காப்பதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் / தனி நபர்களிட மும் நிதி உதவி கோரி நிற்கின்றோம்.
தாய் :- R. சரோஜினி (CS 23857)4,6
074 22 71 889
038 200 1100 32162 (மக்கள் வங்கி) MRS Sarojini Lugisxaviour
2460 200 54 672 (HNB) MRS Sepiyar SL

## காணி விற்பனைக்கு
இயக்கச்சியில் 48 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை.)
Whatsapp: 076 009 3587

## காணி விற்பனைக்கு
திருநெல்வேலி மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை).
தொடர்பு: 077 209 8826

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு
உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலக தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம். (நிறுவனத்தின் உத்தரவாதத்தை ஆராய்ந்து பார்க்கவும்)
**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.**
North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
(CS 23840)(3/6) www.northandeastengineering.com

## கடை வாடகைக்கு உண்டு
இல.27, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம் (CS 23117) (3/6)
075 244 1545, 076 319 7319

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு.
மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.
தொடர்பு:- 076 43 65 814 (CS 1150)

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி போன்ற பிரதான வீதிகளை அண்மித்த பகுதிகளில் நல்ல சுற்றுப்புறச் சூழலில் மூன்று (03) அல்லது நான்கு (04) அறைகள் மற்றும் இரண்டு (02) குளியலறைகள் கொண்ட வீடொன்று வாடகைக் குத் தேவை. குறைந்த பட்சம் இரண்டு வருட வாடகைக் காலம் மற்றும் நியாயமான வாடகை எதிர்பார்க்கப்படுகின்றது. (CS/1136)4,6
075 571 7376

## பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கும் மற்றும் வீட்டு வேலை செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.
074 00 75625, 077 839 5470

## பணியாளர்கள் தேவை
ஸ்ரான்லி றோட்டில் அமைந்துள்ள காட்வெயார் கடைக்கு
- விற்பனையாளர் - ஆண்
- சிட்டையாளர் - ஆண்
- களஞ்சிய காப்பாளர் - ஆண்
- கணக்கு பதிவாளர்.

விற்பனையாளர், சிட்டையாளர், களஞ்சிய காப்பாளர்களுக்கான **நேர்முக தேர்வு எதிர்வரும் 13, 15.03.2023 திகதிகளில் நடைபெறும்.**
நேரம் : முற்பகல் 10.00 தொடக்கம் மாலை 02.00 மணிவரை
**கணக்கு பதிவாளர் பதவிக்கு** விண்ணப்பிப்போர் CV ஐ Whatsapp மூலம் 076 135 9296 என்னும் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
(CS 1129)(3/6) தொடர்பு : 076 135 9298

## காணி விற்பனைக்கு
பிரதான வீதி, தெல்லிப்பளையில் 8 பரப்புக்காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும்.
இரண்டு பக்கம் பாதை உள்ளது.
(கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறந்த இடம்) (CS 1125) (2/6)
T.P.: 075 077 4745

## A/L இரசாயனவியல்
- தனிப்பட்ட வகுப்புக்கள்
- ஆங்கில மொழிமூலம்
- நல்லூர் பிரதேசத்திற்கு அருகாமை
- பெண் மாணவர்களுக்கானது

077 063 8790

## வீடு விற்பனைக்கு
வட்டுக்கோட்டை, உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.
077 819 1314

## வேலைவாய்ப்பு
**களஞ்சியப் பொறுப்பாளர்**
கணினி அறிவுள்ள ஆள்கள் தேவை.
A/L படித்தவர்கள்.
**கணக்காளர்**
பகுதிநேர வேலைக்கு A/L படித்தவர்கள் தேவை.
**(4.30 - 7.30pm)**
**வாகன உதவியாளர்**
பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்துக்கு உதவியாளர்கள் தேவை. (CS 23860)4,6
077 00 90 189

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்புக் காணி விற்பனைக்கு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
074 318 7263, 076 436 5814

## English Medium
cool
Mathematics (Maths)
Home Visiting or Online (Zoom)
(Personal or Group) Classes
National (Local) or London (Cambridge)
Grades 6 7 8 9 10 and
G.C.E. O/L (National) or I.G.C.S.E (London)
Mr.S.Sakthi Eswaran (CS 1079)4,6
# 077 735 2690, # 070 236 3839

## மணமகள் தேவை
கார்த்திகை நட்சத்திரம் 1983 ஆம் ஆண்டு பிறந்த சனியார் துறையில் வேலை பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 1117)(3/6)
தொடர்பு : 075 393 5227

## பணிப்பெண் தேவை
யாழ். நகரில் வீடு ஒன்றிற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு நல்லொழுக்கமுடைய பணிப்பெண் ஒருவர் தேவை. (CS 23866)(3/6)
077 216 2622

## வேலையாள்கள் தேவை
யாழ்நகரிலுள்ள ஃபான்சி கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
யாழ்நகரிற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
070 612 9998

## ROOM FOR RENT
Room Available With All The Facilities For A Lady Doctor Adjoining Moolai Hospital. (CS 1124)(3/6)
6 419 2934, +65 9834 0600

## காணி விற்பனைக்கு
யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (CR 1128)(3/6)
தொடர்பு : 075 599 1097

## கொழும்பு விலையில் 30% விலை கழிவுடன் யாழ்ப்பாணத்தில் விற்பனை
- அழகுசாதன அன்பளிப்பு விளையாட்டு பொருட்கள்.
- கவரிங் நகைகள், சோடினை பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்.
- மணிக்கூட்டு வகைகள், கிறீம் வகைகள்.
- பிளாஸ்ரிக் பொருட்கள், பாட்டா வகைகள்.
- தையல் உபகரணங்கள்.
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்.

✔ கொழும்பு விலையில் விற்பனைக்கு.

இல.26/01
ஜிம்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.
077 468 3354
சரவணபவன் பான்சி கவுஸ்
உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

கந்தையர் வைச்சிருக்கிறார் கடை
காலமை தினம்போடுவார் வடை
சந்தைக்குப் போறவை
சாமான் வாங்கிறவை
கெந்தவும் குறைத்தாரதன் எடை !

- காரைக்கவி

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (12.03.2023) சிகரம் : 139



# கச்சதீவில் காலைவாரிய கடற்படை

○ தி.ராஜ்

கொரோனா நெருக்கடி முடிவுக்கு வந்த பின்னர் இந்த ஆண்டு கச்சதீவுப் பெருந் திருவிழா எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல்நடைபெற்று முடிந்திருக்கின்றது. கடந்த 3 ஆம், 4 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்தத் திருவிழாவில் 8 ஆயிரம் பேர் வரையில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் 5 ஆயிரத்துக்கும் குறைவானோரே பங்கேற்றனர்.

இம்முறை குறைந்தளவானோர் பங்கேற்றமை தொடர்பில் மகிழவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. பெருந்திருவிழா ஆண்டுக்கு ஒருமுறையே நடைபெறுகின்றது. பலரும் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அங்கு திரள்கின்றனர். ஆள்கள் வசிக்காத -இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டில் மாத்திரம் இருக்கின்ற - அந்தத் தீவில் பெருந்திருவிழாவை சிறப்பாக ஒப்பேற்றவேண்டுமானால் இலங்கைக் கடற்படையின் ஒத்துழைப்பு அதிகமாவே தேவைப்படுகின்றது. இம்முறை அந்த விடயத்தில் சறுக்கல் நிகழ்ந்திருக்கின்றது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் அ.சிவபால சுந்தரன் தலைமையில் மூன்று தடவைகள் ஏற்பாட்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடற்படையினர் இந்தக் கூட்டங்க ளில் ஏனோ தானோ என்றே கலந்துகொண்டனரென மாவட்டச் செயலக அதிகாரிகள் குறைபட்டுக்கொள்கின்றனர். கடற்படையினரின் உதவியின்றி கச்சதீவுத் திருவிழாவை நடத்தமுடியாது என்ற சூழலில், கடந்த காலங்களில் கடற்படையினர் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.






கச்சதீவுத் திருவிழா தொடர்பான முதலாவது ஏற்பாட்டுக் கூட்டத்திலேயே கடற்படையினர், ஒவ்வொரு ஏற்பாடுகளுக்கும் 'பணம் யார் தருவார்கள்?' என்ற கேள்வியையே முன்வைத்தனர். கடந்த காலங்களில், கடற்படையினரே சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டு அதற்குரிய கொடுப்பனவைப் பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்டனர். உணவுக்குரிய கொடுப்பனவு மாத்திரம் கிறிஸ்தவ விவகார அமைச்சால் வழங்கப்படுவது வழமை. ஆனால் இம்முறை ஏற்பாட்டின் ஒவ்வொரு விடயத்துக்கும் கடற்படையினர் 'பணம் இருந்தாலே செய்யலாம்' என்ற நிலைப்பாட்டில் இருந்ததால் மாவட்டச் செயலகம் சிக்கலை எதிர்கொண்டது.

கச்சதீவுப் பெருந்திருவிழாவுக்கு வடதாரகைப் படகு ஒரு தடவையே கடந்த காலங்களில் சேவையில் ஈடுபட்டது. அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள், பிரமுகர்களை கடற்படையினர் தமது கடற்படைக் கலங்களில் ஏற்றிச் சென்று திருப்பி அழைத்து வருவது வழமை. ஆனால் இம்முறை அந்த நடவடிக்கை முற்றாகத் தலைகீழாகியது.

வடதாரகைப் படகு இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபட்டது. குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவு சென்று திரும்புவதற்கு 7 மணித்தியாலங்கள் தேவை. இவ்வாறானதொரு நிலையில் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையிலிருந்தே வடதாரகைப் படகு இயங்கியது. அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள் எல்லோரும் வடதாரகைப் படகிலேயே அழைத்துச் செல்லப்பட்டனர்.

கச்சதீவில் திருவிழா முடிவடைந்த பின்னர் திரும்பி வருவதிலேயே பெரும் சிக்கல் ஏற்பட்டது. இரண்டு தடவைகளில் வடதாரகையில் ஏற்றிச் சென்றவர்களை ஒரே தடவையில் திருப்பி அழைத்து வருவது என்பது சாத்தியமற்றது. எனவே பல மணிநேரம் பக்தர்கள் கச்சதீவில் காக்கவைக்கப்பட்டனர். இதன் பின்னர்

**நெடுந்தீவிலிருந்து பெருந்தொகையானோருக்கு உணவை எடுத்துச் செல்வது சாத்தியமற்றதாக இருந்ததால் கடற்படையினரிடம் அவர்கள் அதனை ஒப்படைத்திருந்தனர். பெருந்தொகையானோருக்கு உணவு சமைப்பதென்றால் சோறையே தம்மால் சமைக்க முடியும் என்று கடற்படையினர் கூறியுள்ளனர். அத்துடன் தமிழகப் பக்தர்களின் உணவுப் பழக்கத்துக்கும் சற்றும் ஒவ்வாத உணவுகளையே கடற்படையினர் வழங்கியுள்ளனர்.**

கடற்படையினரின் பொருள்களை ஏற்றிச் செல்லும் படகில், தளத்தில் அமர்ந்தே பலர் திரும்பி வந்தனர். இதனைவிட கடற்படையினரின் கலங்களில் அழைத்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர்களும் திரும்பி வருவதற்கான ஒழுங்கு செய்யப்படவில்லை. இது தொடர்பில் கடற்படையின் வடபிராந்தியத் தளபதியிடம் கேட்டபோது, அது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது. தான் அதற்குப் பொறுப்பில்லை என்று பொறுப்பற்ற விதத்திலும் பதிலளித்திருந்தார்.

இதேபோன்று, கச்சதீவில் முதல்நாள் அதாவது கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் குடிதண்ணீரும் தீர்ந்து விட்டது. இதனால் இந்திய, இலங்கைப் பக்தர்கள் பெரும் அவதியுற்றனர். அங்குள்ளோருக்கான உணவு விநியோகப்பொறுப்பு இலங்கைக் கடற்படையினரிடமே கையளிக்கப்பட்டிருந்தது. யாழ். மாவட்டச் செயலகமே அதனைக் கையளித்திருந்தது.

நெடுந்தீவிலிருந்து பெருந்தொகையானோருக்கு உணவை எடுத்துச் செல்வது சாத்தியமற்றதாக இருந்ததால் கடற்படையினரிடம் அவர்கள் அதனை ஒப்படைத்திருந்தனர். பெருந்தொகையானோருக்கு உணவு சமைப்பதென்றால் சோறையே தம்மால் சமைக்க முடியும் என்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

அத்துடன் தமிழகப் பக்தர்களின் உணவுப் பழக்கத்துக்கும் சற்றும் ஒவ்வாத உணவுகளையே கடற்படையினர் வழங்கியுள்ளனர். இதனால் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்தகாலங்களில் கச்சதீவுத் திருவிழாவுக்கு வழங்கியதைப்போன்று கடற்படை ஆதரவு வழங்காமையே இம்முறை பெருந்திருவிழாவில் ஏற்பட்ட பெரும் அசௌகரியத்துக்கு காரணமாகியது.

ஆனாலும், கடற்படையினரும் தமக்கான செலவுகளுக்கு மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையால் தம்மாலும் ஒரு எல்லைக்கு மேல் நகர முடியவில்லை என்ற காரணத்தை முன்வைக்கின்றனர்.

எனினும், இரு நாட்டுப் பக்தர்கள் சங்கமிக்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த பெருந்திருவிழாவில் இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது அனைவரினதும் கடமை. ஏற்கனவே கச்சதீவு அரசியல் ரீதியாக புகைந்துகொண்டிருக்கையில் அதில் எண்ணெய் ஊற்றும் கைங்கரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த கொல்லாத நாய்கள்



நிலாந்தன்

கடந்த டிசெம்பர் மாதம் யாழ்.பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன். வீதியைத் திடீரென்று குறுக்கறுத்து ஓடிய ஒரு தொகை நாய்களின் மீது மோதி விழுந்ததில் எனது கைவிரல் ஒன்று அறுந்து தொங்கியது. யாழ்.போதனா மருத்துவமனையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் எனது விரலைக் காப்பாற்றினார்.

நாய்களில் மோதிப் படுகாயம் அடைந்தவர்கள் மட்டுமல்ல,'கோமாநிலைக்கு' சென்றவர்களும் உள்ளனர். என்று போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.யாழ்ப்பாணத்தின் சிறிய ஒழுங்கைகளில் கட்டாக்காலி நாய்கள் பெருகிவிட்டன.காலை வேளைகளில் எல்லாச் சிறிய தெருக்களிலும் நாயின் கழிவுகளைக் காணலாம்.

எனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியை திருநெல்வேலிப் பகுதியில் உள்ள ஒழுங்கையால் பாடசாலைக்குச் செல்வதில்லை எனக் கூறினார் ஏன் என்று கேட்டேன். "காலையில் எழுந்து குளித்து வெளிக்கிட்டு அந்த வீதி வழியாகச் சென்றால் எங்கும் நாயின் கழிவுகளைக் காணலாம். அந்தக் கழிவுகளில் மொய்க்கும் இலையான் மோட்டார் சைக்கிள் கடக்கும்போது அப்படியே எழும்பி எங்களுடைய முகங்களிலும் மொய்க்கிறது. அருவருப்பாக இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காக பிரதான சாலைகளின் ஊடாக பாடசாலைக்குச் செல்கிறேன்"என்று சொன்னார்.

அவர் குறிப்பிட்ட அந்த வீதி வழியாக நான் அடிக்கடி காலை வேளை போய் வருவேன். அப்பொழுதெல்லாம் சந்தைக்குக் கறிவேப்பிலையைச் சுமந்து செல்லும் வியாபாரிகளைக் கண்டிருக்கிறேன்.அவர்கள் கறிவேப்பிலைக் கிளைகளை சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டு போவார்கள்.சைக்கிள் கரியரின் இருபக்கமும் தொங்கும் கறிவேப்பிலைக் கிளைகள் வீதியைத் தொட்டுக் கொண்டு போகும். அந்த வீதி நெடுக நாயின் மலம் இருக்கும்.அதை பார்த்ததிலிருந்து நான் சந்தையில் கறிவேப்பிலை வாங்குவதே இல்லை. திருநெல்வேலிச் சந்தையில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான சந்தைகளில் வீதியோரங்களில் நாய் மலத்தைக் காணலாம். அந்த மலத்தில் மொய்க்கும் இலையான்கள் அப்படியே எழும்பி அந்த வீதியோரம் அமைந்திருக்கும் சாப்பாட்டுக் கடைகளிலும் மொய்க்கின்றன.ஆயின் நாம் சாப்பிடும் சாப்பாட்டின் சுகாதாரத்தை ஒரு முறை கற்பனை செய்து பாருங்கள்.

நாய் மலத்தை அகற்றுவது என்பது தெருநாய்களை அகற்றுவதுதான். தெரு நாய்களை ஏன் அகற்ற முடியவில்லை ? அண்மையில் ஒரு நேர்காணலின்போது தெரு நாய்களுக்கு உணவூட்டிய ஒருவர் கௌரவிக்கப்பட்டார். அதைப்பார்த்துவிட்டு, கனடாவில் இருந்து வந்த ஒரு நண்பர் கேட்டார்..."தெரு நாய்களைப் பராமரிப்பது நல்ல விடயம். ஆனால் எப்படிப் பராமரிக்க வேண்டும்? வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களில்தெருநாய்களுக்குப் பராமரிப்பு நிலையங்கள் உண்டு.அப்படிப்பட்ட பராமரிப்பு நிலையங்களில் கொண்டுபோய் நாய்களைச் சேர்ப்பது தான் அதற்குரிய வழி.மாறாக கட்டாக்காலி நாய்களைத் தெருக்களிலேயே வைத்துப் பராமரிப்பது என்பது மோசமான ஒரு நடைமுறை. அதைப் பாராட்டலாமா?" என்று.

மாநகரங்களில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கென்று. ஒரு பொறிமுறை உண்டு.அதற்கென்று பராமரிப்பு நிலையங்களும் உண்டு.தவிர தமிழகத்தில் செயற்படும் "ப்ளூகுறஸ்"(BLUE CROSS) நிறுவனத்தைப் போன்ற தன்னார்வ நிறுவனங்களும் உண்டு. ஆனால் தமிழ்ப்பகுதிகளில் அவ்வாறு ஒரே ஒரு தன்னார்வ நிறுவனம் தான் உண்டு.

நாய்களைத் தெருக்களில் விடுவது, குறிப்பாக பெண் நாய்க்குட்டிகளைத் தெருவில் விடுவது என்பது தமிழ்க் கலாசாரத்தின் சீரழிந்த ஒரு பகுதியாக பல தசாப்த காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது தொடர்பாக யோகர் சுவாமிகள் சமாதி அடைவதற்கு முன்பு தெரிவித்த ஒரு தகவலை ஒரு சமயப் பெரியார் எனக்குச் சொன்னார். ஒரு முறை மருதனார்மடம் சந்தையில் யோகர் சுவாமிகள் குந்தியிருந்தபோது, ஒரு சிறுவன் ஒரு பெட்டிக்குள் எதையோ காவிக் கொண்டு வந்திருக்கிறான்.அந்தப் பெட்டியை வைத்துக்கொண்டு நீண்ட நேரமாக சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்றிருக்கிறான்.நீண்டநேரமாக அந்தச்சிறுவன் வீதியில் நிற்பதைக் கண்ட யோகர் பெட்டிக்குள் என்ன என்று கேட்டிருக்கிறார். பெட்டிக்குள் பெண் நாய்க்குட்டிகள் உண்டு என்று அவன் சொல்லியிருக்கிறான். அவற்றை மருதனார்மடம் சந்தையில் விடுமாறு சொன்னார்கள். ஆனால் அங்கே இருப்பவர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்பதனால், ஆளில்லாத வீதி ஓரத்தில் விடலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவன் சொல்லியிருக்கிறான். இதைக் குறித்து பின்னர் தனது அடியார்கள் மத்தியில் உரையாற்றிய யோகர் ' பெண் நாய்களை இவ்வாறு தெருக்களில் அநாதைகளாக விடுவது ஒரு பாவம். அதன் கர்மவினையை யாழ்ப்பாணம் ஒரு நாள் அனுபவிக்கும்.... யாழ்ப்பாணத்தவர்களும் ஒரு நாள் தெருவில் வந்து நிற்க வேண்டியிருக்கும்' என்று மனம்நொந்து கூறியிருக்கிறார்.

ஆனால் யோகர் சுவாமிகளுக்கு முன்னரும், பின்னரும், இப்பொழுதும்,பெண் நாய்க்குட்டிகள் தெருக்களில் விடப்படுகின்றன.

2015 க்கு முன்புவரை இந்த நாய்களைப் பிடித்து கடலில் மூழ்கடித்துக் கொல்வார்கள்.எமது சிறுவயது ஞாபகங்களில் நாய் வண்டி என்பது நம்மைப் பயமுறுத்தும் ஒரு வண்டிதான். இரண்டு பேர் அந்த வண்டியைத் தள்ளிக் கொண்டு வருவார்கள்.பிடிபட்ட நாய்கள் சிறைக் கூண்டுக்குள் இருந்து கொண்டு எம்மைப் பரிதாபகரமாகப் பார்க்கும்.யாழ். நகரப் பகுதியில் அவ்வாறு நாய் பிடிப்பதற்கு முழங்கைவரை ஒரு கை இல்லாத நகரசுத்திக்ரிப்புத் தொழிலாளர் ஒருவர் மாநகரசபையால் நியமிக்கப்பட்டிருந்தார்.அவருடைய கையில் கம்பியாலான ஒரு சுருக்குத்தடம் இருக்கும். அந்த வண்டில் வீதியில் வரும்போது அவர் தன்னிடம் உள்ள தடியால் உள்ளே பிடிபட்டிருக்கும் நாய்களைக் குத்துவார்.நாய்கள் கத்தும்.அந்தச் சத்தத்தைக் கேட்டு வீட்டிலிருக்கும் நாய்களும் தெரு நாய்களும் அந்த இடத்துக்கு வரும்.அப்பொழுது அவர் நாய்களைப் பிடிப்பார்.சுருக்குக் கம்பியில் சிக்கி நாய் துடிக்கும் காட்சி பரிதாபகரமாக இருக்கும். அதை அப்படியே இழுத்து வண்டிக்குள் ஏறிவார். வளர்ப்பு நாய்களை எஜமானர்கள் காசு கொடுத்து மீட்பார்கள்.ஆனால் அநாதைகளான கட்டாக்காலி நாய்கள் பின்னர் கடலில் மூழ்கடித்துக் கொல்லப்படும். அதன் பின் கொல்லப்பட்ட நாய்களின் வால்களை வெட்டி கொண்டு வந்து கணக்குக் காட்டி தங்களுக்குரிய கொடுப்பனவைப் பெறுவார்களாம்.

2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச நாய்களை அவ்வாறு கொல்வதற்குத் தடை விதித்து ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டார். அதாவது 2009ஆம் ஆண்டு போர்க்களத்தில் சிக்கியிருந்த தமிழர்களை பூச்சி,புழுக்களைப் போல கொன்று யுத்தத்தை வென்ற ஒருவர், சரியாக ஆறு ஆண்டுகளின் பின் நாய்களைக் கொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டார்.

அதன் பின் நாய்களைப் பிடிப்பவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஏனென்றால் பிடிக்கப்படும் நாய்களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் உரிய பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில் யாழ். மாநகரசபை பிடித்த நாய்களைச் சிறிது காலம் கல்லுண்டாய் வெளியில் கொண்டு போய்விட்டது. ஆனால் அந்த நாய்கள் அயலில் உள்ள கிராமத்தவர்களின் கால்நடைகளைக் கடிக்கத் தொடங்கியதும் அது ஒரு முறைப்பாடாக வந்தது.அதைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டது. அதன்பின் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுவதில்லை.

கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கென்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு பராமரிப்பு நிலையத்தை ஆரம்பித்தார். ஆனால் அவரிடம் நாய்களைப் பிடிக்கும் ஏற்பாடு இல்லை.பிடிக்கப்பட்ட நாய்களை பராமரிக்கும் ஏற்பாடுதான் உண்டு.அதிலும் போதிய வளங்கள் இல்லை. தனக்குப் போதிய நிதி உதவியோ, துறைசார் உதவிகளோ அல்லது குறைந்தபட்சம் தார்மீக உதவிகளோ கிடைக்கவில்லை என்று அவர் கவலைப்பட்டார்.தனது பராமரிப்பு நிலையத்தின் தராதரம் குறித்து ஒரு பகுதியினர் எழுப்பிய முறைப்பாடுகளால் அவர் அதிகம் நொந்து போயிருந்தார்.

அவரைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவரும் ஒரு நாய் பராமரிப்பு நிலையத்தை உருவாக்க முற்பட்டார். அதைக் குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன.அவர் அந்த முயற்சியைப் பாதியிலேயே கைவிட்டார்.இப்பொழுது சிவபூமி அறக்கட்டளையின் ஒரே ஒரு நாய் பராமரிப்பு நிலையந்தான் வடக்கில் உண்டு. அங்கேயும் போதிய வளங்கள் இல்லை. ஆதரவு இல்லை. ஆறு.திருமுருகன் பெரும்பாலும் சலித்துப் போய்விட்டார். அந்த பராமரிப்பு நிலையத்தை மூடிவிடலாமா என்று யோசிக்கும் அளவுக்கு அவர் நொந்து போய்விட்டார்.

ஆனால் தென்னிலங்கையில் நாய்களைப் பராமரிப்பதற்கு பல நிலையங்கள் உண்டு என்று கூறப்படுகிறது. அவ்வாறு அம்பாந்தோட்டையில் காணப்படும் பராமரிப்பு நிலையத்துக்கு வேண்டுமானால் வடக்கிலிருந்து நாய்களைக் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்று உள்ளூராட்சிசபை நிர்வாகிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு.

மனிதகுல வரலாற்றில் மனிதனின் முதல் வளர்ப்புப்பிராணி நாய்தான். மனிதன் வேட்டையாடி உணவு தேடுபவனாக இருக்கும்போதே வேட்டைத் துணையாக நாய்கள் இணைந்தன. அதன் பின் நதிக்கரை நாகரிகங்களில் வீட்டு வளர்ப்பு பிராணிகளாக நாய்கள் மனிதர்களோடு காணப்பட்டன.

நாய்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு பூர்வ காலத்திலிருந்தே தொடங்குகிறது. நன்றியுள்ளது மனிதர்களைப் போல பழிவாங்காது காவல் காப்பது என்றெல்லாம் போற்றப்பட்ட நாய்களை இந்துக்கள் வைரவக் கடவுளின் வாகனமாக உருவகித்து வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு தமது காவல் கடவுள் ஒருவரின் வாகனமாகக் காணப்படும் நாய்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது ? யோகர் சுவாமிகள் 1960 களின் நடுப்பகுதியில் மனம் நொந்து கூறிய அதே நிலைமைதான் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டின் பின்னரும் இப்பொழுதும் காணப்படுகிறது. நாய்களைப் பராமரிப்பதற்குக் கூட ஒரு வளம் பொருந்திய நிலையத்தை உருவாக்க முடியாத மக்களா நாம்?

**2009ஆம் ஆண்டு போர்க்களத்தில் சிக்கியிருந்த தமிழர்களை பூச்சி,புழுக்களைப் போல கொன்று யுத்தத்தை வென்ற ஒருவர், சரியாக ஆறு ஆண்டுகளின் பின் நாய்களைக் கொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டார். அதன் பின் நாய்களைப் பிடிப்பவர்களுக்குக் வேலையில்லாமல் போய்விட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்



> கடந்த பதின்மூன்று வருடங்களிலும் வடக்கு– கிழக்கு மக்கள் அரசாங்கத்தின் தொடர் அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகின்றனர். கொழும்பை மையமாகக் கொண்ட சிங்களத் தொழிற்சங்கங்கள் வடக்கு - கிழக்கு அரச ஊழியர்களுக்கு ஆதரவாக எந்தவொரு போராட்டங்களையும் நடத்தவில்லை

# இனவாதத்தை இடமாற்ற முற்படும் வேலைநிறுத்தப் போராட்டங்கள்

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக முப்பது அரச தனியார் துறை தொழிற்சங்கங்கள் சில இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் நடத்தி வரும் தொடர் போராட்டங்கள், சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள கடன் திட்டங்கள் மற்றும் சுற்றுலாத்துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்துக்கள் விஞ்சிக் காணப்படுகின்றன.

இந்தத் தொடர் போராட்டங்களினால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று அரசாங்கம் கூறுவதை மக்கள் நம்பக்கூடிய நிலை இல்லை. ஆனால் பிரித்தானிய அரசாங்கம் தமது பிரஜைகளுக்கு அறிவுறுத்திய பயண எச்சரிக்கை இலங்கைத்தீவின் அரசியல் நெருக்கடியையும் பகிரங்கப்படுத்தியுள்ளது. இந்தப்போராட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நேரடியாகப் பங்குபற்றவில்லை. ஆனாலும் ஆதரவு கொடுத்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நடத்தும் போராட்டங்களின் பின்னணியிலும் இடதுசாரிகள் இருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

ஆக்வே இலங்கை அரசாங்கம் எதிர்க்கட்சிகளிடம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம், போராட்டங்கள் நிறுத்தப்பட்டால் மாத்திரமே பொருளாதார மீட்சியைக் காணமுடியும் என்பது உண்மை. இது போராட்டங்களில் ஈடுபடும் தொழிற்சங்கம் மற்றும் மாணவர்களுக்குத் தெரியாததல்ல.

ஆனால் அரசாங்கத்தின் ஜனநாயக அடக்குமுறையை நிறுத்தாமல் பொருளாதார முன்னேற்றம் சாத்தியம் இல்லை என்றே சோசலிச சமத்துவக் கட்சி உள்ளிட்ட இடதுசாரிகள் கூறுகின்றன. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இடதுசாரிகள் என்று கூறிவரும் சிறிய கட்சிகள் சிங்கள இனவாதத்தையே விதைத்திருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

2009 இல் தமிழர்களின் விடுதலைப்போராட்டம் அழிக்கப்பட்டு, இனப்படுகொலை நடந்தமைக்கான காரணிகளில் சிவப்புச் சட்டை போட்டு பௌத்ததேசிய அரசியலை முன்னெடுத்து வரும் ஜே.வி.பியும் ஒன்று. தற்போது ஜே.வி.பியில்

## சோசலிச சமத்துவப் போர்வைக்குள் தமிழ்த்தேசியத்தை நீக்க இடதுசாரிகள் வகுக்கும் மற்றொரு வியூகம்



இருந்து பிரிந்து குமார் குணரட்னம் தலைமையில் இயங்கி வரும் முன்னிலை சோசலிசக் கட்சியும் இனவாதத்தையே கையில் எடுத்திருக்கின்றது. கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராகக் கடந்த ஆண்டும் , ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்து இந்த ஆண்டும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களின்போது, இலங்கை ஒற்றையாட்சி அரசின் கட்டமைப்பை மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை.

குறைந்தபட்சம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூட இந்த இடதுசாரிகளுக்கு மனம் இல்லை. பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் சிலவேளை வாக்கு அரசியல் நோக்கில் உடன்பட்டாலும், இந்த இடதுசாரிகள் அதனை இனவாத மூலதனமாக்கி அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவார்கள். இதுதான் இலங்கைத்தீவில் இடதுசாரிகளின் வரலாறு. இந்த வரலாற்றுப் பின்புலங்களைக் கொண்ட இடதுசாரிகள்தான் ரணில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களையும் அடையான வேலை நிறுத்தப் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். வாழ்க்கைச் செலவு அண்ணளவாக ஐந்து மடங்காகக் கடந்த ஒரு வருடத்தில் அதிகரித்தாலும் பொருளாதார நெருக்கடி தொடருவதாலும் மக்கள் சலிப்படைந்துள்ளனர். அரச ஊழியர்களின் மனங்களும் நொந்துபோயுள்ளன. இவற்றை மூலதனமாக்கி சோசலிச சமத்துவம் என்று சாயம் பூசி வடக்கு - கிழக்குத் தமிழர்களையும் அதில் அரவணைப்பது போன்ற தோற்றப்பாட்டைக் காண்பிக்க இடதுசாரிகள் முற்படுகின்றனர்.

கோத்தாவுக்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டத்தை ஈழத்தமிழர்கள் ஆதரித்திருந்தாலும் அதில் பங்கெடுக்கவில்லை. அதற்கான காரண காரியம் அப்போது இந்த இடதுசாரிகளுக்கும் முற்போக்குச் சிங்களப் புத்திஜீவிகளுக்கும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பிரதேசங்களில் நடந்த உரையாடல்களில் புரியவைக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொள்வது போன்று காண்பித்திருந்தாலும், அதற்குரிய பதிலை வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையில் "பொருளாதார நெருக்கடி" என்ற பொதுப்பிரச்சினையைக் காரணம்கூறி ரணிலுக்கு எதிரான அரசியலை வேலைநிறுத்தப் போராட்டம் என்ற வடிவில் இந்த இடதுசாரிகள் ஆரம்பித்திருக்கின்றனர்.

ஆனால் எழுபது வருடகால இனப்பிரச்சினையில் முப்பது ஆண்டுகாலப் போரும் , 2009 இன் பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களில் நிரந்தர அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமையுமே பொருளாதார நெருக்கடிக்கான பிரதான மூல காரணம் என்பதை இவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. "இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இனரீதியான அரசியல் - பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வந்தமையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்" என்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி 'கொழும்புரெலிகிராப்' என்ற ஆங்கில இணையத்தளத்தில் அசோக லியனகே என்ற விமர்சகர், தனது அரசியல் பத்தி எழுத்தில் சுட்டிக்காட்டி யிருந்தார். முப்பது வருட போர் நடைபெற்ற காலத்திலேதான் சிங்கள ஆட்சியாளர்கள் அதிகாரத் துஷ்பிரயோகத்திலும், ஊழல் மோசடிகளிலும் கூடுதலாக ஈடுபட்டிருந்ததாகவும் சிங்கள மக்களுக்கு இப்போதுதான் இது புரிகிறது எனவும் அந்தக் கட்டுரையில் அவர் விளக்கியிருந்தார்.

ஆகவே பிரதான சிங்களக் கட்சிகள் தாம் ஆட்சியமைக்க வசதியாகக் கிளப்பிவிடுகின்ற இனவாதத்துக்கும், ஆட்சியைப் பிடிக்கவே முடியாத இந்த இடதுசாரிகள் பேசுகின்ற இனவாதத்துக்கும் இடையே வேறுபாடுகள் இல்லை என்பதையே தமிழர்களுடனான இடதுசாரிகளின் இந்தப் போராட்ட அணுகுமுறை பகிரங்கப்படுத்துகின்றது.

பிரதான கட்சிகள் ஆட்சியமைக்க இந்த இடதுசாரிகள் அவ்வப்போது ஆதரவும் வழங்கி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றிருந்தவர்கள் என்பதும் கண்கூடு. கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' நாளேடு வெளியிட்ட செய்தியின் பிரகாரம், வடக்கு-கிழக்கில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் மருத்துவத்துறையினர் போராட்டத்தில் பெருமளவு பங்குகொள்ளவில்லை என்பது தெரிகின்றது. வடக்கு மாகாண அரச ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் பற்றிய தகவல் அந்தச் செய்தியில் இல்லை.

அரசாங்கத்தின் அடக்குமுறையைப் பிரதானமாகக் கொண்டு வரிக் கொள்கை, உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவது மற்றும் சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பை மையமாகக் கொண்ட தொழிற்சங்கங்கள், சில இடதுசாரிகளின் ஒத்துழைப்புடன் நடத்தும் போராட்டம் நியாயமானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனாலும் வடக்கு - கிழக்கில் இந்தப் போராட்டம் அவசியம் இல்லை என்றே தமிழ் அரச ஊழியர்கள் உணர்கிறார்கள் என்பது பகிரங்கமாகப் புரிகிறது.

இந்தப் புரிதலில் உண்மை உண்டு. ஏனெனில் முப்பது வருடப் போரினாலும் 2009 மே மாதத்துக்குப் பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களிலும் வடக்கு-கிழக்கு மக்கள் அரசாங்கத்தின் தொடர் அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆகவே கொழும்பை மையமாகக் கொண்ட சிங்களத் தொழிற்சங்கங்கள் வடக்கு - கிழக்கு அரச ஊழியர்களுக்கு ஆதரவாக எந்தவொரு போராட்டங்களையும் நடத்தவில்லை.

விக்கிரமபாகு கருணாரட்ணவின் இடதுசாரிக் கட்சியைத் தவிர வேறு எந்தவொரு சிங்கள இடதுசாரிகளும் எமது குரலைச் செவிமடுக்கவே இல்லை. சில இடதுசாரிகள் நீலிக்கண்ணீர் மாத்திரம் வடித்திருந்தன. இதனைத் தமிழர்கள் அறியாதவர்கள் அல்லர்.

இருந்தாலும் கடந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியின் பின்னரான சூழலில், சிங்களத் தொழிற்சங்கங்கள் நடத்தி வரும் பல போராட்டங்களுக்கு வடக்கு - கிழக்கு தமிழ் அரச ஊழியர்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கி வந்தனர்.

தற்போது நடக்கும் போராட்டங்களுக்குக்கூட ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆனால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பெருமளவில் அவர்கள் பங்களிப்புச் செய்யவில்லை. ஏனெனில் போர்க்காலத்திலும் , அதற்குப் பின்னரான சூழலிலும் உரிய நிவாரணங்கள், சலுகைகள் குறிப்பாக அரச ஊழியர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, நிரந்தர நியமனங்கள் வழங்குவதில் இழுபறி மற்றும் அரச அலுவலகங்களில் போதிய வசதிகள், வளங்கள் இன்மை போன்ற பல நெருக்கடிகள் குறித்து இந்தத் தொழிற் சங்கங்களுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவேயில்லை.

அவ்வப்போது ஏற்படுகின்ற இராணுவத் தலையீடுகள், கொழும்பு சிங்கள அதிகாரபீடம் வடக்கு- கிழக்கில் இயங்கிய மாகாண அரச அதிகாரங்களைக் கடந்து, அரச ஊழியர்களின் நியமனங்கள், செயற்பாடுகளில் தலையிட்டமை குறித்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால் கொழும்பை மையமாகக் கொண்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அவற்றைக் கண்டுகொள்வதில்லை. இங்கே வடக்கு-கிழக்கை அரசாங்கம் புறக்கணிப்பது என்பது வேறு. ஆனால் இடதுசாரிகளின் ஒத்துழைப்புடன் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடும் தொழிற் சங்கங்கள் புறக்கணிப்பதென்பதுவேறு. சகல தொழிலாளர்களுக்குமான அமைப்புகள் இனரீதியாகத் தம்மை அடையாளப்படுத்தக்கூடாது.

அரசியலுக்காகவும் சர்வதேச சமூகத்துக்குக் காண்பிக்கவும் குறிப்பிட்ட சில அரச நிறுவனங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருந்தாலும். சிங்களப் பிரதேசங்களில் இயங்கும் அரச நிறுவனங்கள் பெற்றுள்ள நவீன வசதி வாய்ப்புகள் வடக்கு - கிழக்கில் இல்லை என்ற உண்மையை இந்தத் தொழிற் சங்கங்கள் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ரணில் அரசாங்கத்தின் அடக்குமுறையை பிரதான கருப்பொருளாக்கி போராட்டம் நடத்தும் தொழிற்சங்கங்கள், வடக்கு- கிழக்கு அரச நிறுவனங்கள் புறக்கணிக்கப்படுகின்றமையும், கொழும்பு நிர்வாகத்தின் அரசியல் தலையீடுகள், இராணுவப் பிரசன்னங்களையும் பேசவேண்டும். ஆனால் இவர்களோடு பேசிப் பயனில்லை என்பது வடக்கு - கிழக்குத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் நன்கு தெரியும்.


ஆகவே இலங்கை அரசாங்கம் கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட அரசியல் ரீதியான அத்தனை புறக்கணிப்புகளுக்கும் இந்தத் தொழிற்சங்கங்களும் சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

அரசியல் கட்சிசாராத குறிப்பிட்ட சில சிங்களத் தொழிற்சங்கங்கள் வடக்கு - கிழக்கு அரச ஊழியர்கள் மற்றும் மக்களின் நலன்களில் கவனம் செலுத்தியிருக்கின்றன. குறிப்பாக ஜோசப் ஸ்ராலின் தலைமையிலான இலங்கை ஆசிரியர் சங்கம் , போர் மற்றும் அதற்குப் பின்னரான காலங்களிலும் தமிழ் ஆசிரியர்கள் விவகாரங்களில் அதீத கவனம் செலுத்தியிருந்தது. ஆனால் இடதுசாரிகள் என்று தம்மைத்தாமே மார்தட்டிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சிகள் சார்ந்த தொழிற்சங்கங்கள், ஈழத்தமிழர்கள் பற்றிய சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைக்கு ஒப்பாகவே இன்றுவரை செயற்பட்டு வருகின்றன. இதன் காரணத்தினாலேதான் தற்போது ரணில் அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாத சூழல் உருவாகியிருக்கின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் கைவண்ணம்




சு.நிருஷிகன்
தரம்- 6
யா/ கொக்குவில்இந்துக் கல்லூரி



மு.அட்ஷயா
தரம்-10
(யா /இந்து மகளிர் கல்லூரி)



ரி.அஜித்,
தரம் - 09
யா/ மந்துவில் ஆர்.சி.ரி.
எம். பாடசாலை



தே. நாகவருணன்,
தரம் - 03
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.



கீர்த்தி விஸ்வகி,
தரம் 1
யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## கோபம் இயல்பா?



ஒரு சீடன் தன் குரு பாங்கய்யிடம் கேட்டான். " என்னால் எனது கோப இயல்பைக் கட்டுப்படுத்தவே இயலவில்லை."

குரு அவனிடம், " உனது கோபம் எங்கே? எனக்குக் கொஞ்சம் காட்டு" என்றார்.

சீடன் ஆச்சரியப்பட்டான்.

"இப்போதைக்கு என்னிடம் கோபம் இல்லை. அதனால் என்னால் அதைக் காட்ட முடியாது" என்றான்.

குரு பாங்கய் பதில் அளித்தார். "பிரச்சினை ஒன்றும் இல்லை. கோபம் வரும்போது என்னிடம் கொண்டுவந்து காட்டு" என்றார். சீடன் கடுப்புடன், "கோபம் வந்தவுடன் என்னால் கொண்டுவந்து உடனடியாகக் காட்ட முடியாதே" என்றான். அத்துடன், "எதிர்பாராத வேளையில் கோபம் வரும். அதை நான் உங்களிடம் வந்து காட்டுவதற்குள் நிச்சயமாக மறைந்தே போய்விடும்" என்றான் சீடன்.

"அப்படியானால் கோபம் என்பது உனது உண்மையான இயல்பாக இருக்க முடியாது" என்றார் குரு.

"கோபம் உனது உண்மையான இயல்பாக இருக்கும் எனில் எந்தச் சமயத்திலும் என்னிடம் அதைக் கொண்டுவந்து காட்ட முடியும். நீ பிறக்கும்போது உன்னிடம் அது இல்லை. உனது பெற்றோரும் உன்னிடம் தரவில்லை. அதனால் அது வெளியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ அதை ஒரு குச்சியால் அடித்து விரட்டு" என்றார் குரு.

## நற்பண்புகள்

1. அதிகாலையில் எழு
2. பல் துலக்கு
3. சுத்தமாகக் குளி
4. பாடங்களைப் படி
5. இறைவனை வணங்கு
6. கைகளைக் கழுவு
7. சத்தான உணவை உண்
8. பெற்றோரை மதி
9. பள்ளிக்குச் செல்
10. குருவை வணங்கு
11. நூல்களைப் படி
12. மாலையில் விளையாடு
13. பாடங்களை எழுது
14. அறிவைப் பெருக்கு
15. அளவோடு உண்
16. நன்றாகத் தூங்கு

## சிறுவர் சுடர்

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## அறிந்து கொள்வோம்

நோபல் பரிசு, மக்சாசே, பாரத ரத்னா என்னும் மூன்று விருதுகளை பெற்ற ஒரே நபர்?
**அன்னை திரேசா**

மூன்று கோடி மரங்களை நட்டு நோபல் பரிசு பெற்றவர் யார்?
**வாங்கரி மாத்தாய்**

எகிப்து நாகரிகம் எந்த ஆற்றங்கரையில் தோன்றியது?
**நைல்நதி**

பாலைவனமும் கடலும் சந்திக்கும் ஒரே இடம் எங்கு அமைந்துள்ளது?
**நமீபியா**

இலங்கையின் பழைய பெயர்
**சிலோன்**

## ஐவகை நிலங்கள்

மலையும் மலை சார்ந்த இடமும்
**குறிஞ்சி**

காடும் காடு சார்ந்த இடமும்
**முல்லை**

வயலும் வயல் சார்ந்த இடமும்
**மருதம்**


கடலும் கடல் சார்ந்த இடமும்
**நெய்தல்**

மணலும் மணல் சார்ந்த இடமும்
**பாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ சூரியன்

# அறிந்தும் அறியாமலும்



## சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாரியாரான மைத்திரி விக்கிரமசிங்கவின் தாயார் சில நாள்களுக்கு முன்னர் காலமானார். இறுதிக்கிரியைகள், நாவல பொதுமயானத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றன.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு, அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி செலுத்துவதற்காக வந்திருந்த சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனியறையொன்றில் சந்தித்து இரகசியமாக, அரசியல் சார்ந்த விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினாராம்.

அத்துடன், ஜனாதிபதியின் மாமியாரின் இறுதிக்கிரியைகளில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பங்கேற்க முடியாமல்போனது. அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவ்விருவரும் ஜனாதிபதியை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு, தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.



## கடுப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் விசேட கூட்டமொன்று கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் மொட்டுக்கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. பஸில் ராஜபக்சவும் இதில் பங்கேற்றிருந்தார்.

கட்சியின் மாவட்ட தலைவர்களும், ராஜபக்சக்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல் பிரமுகர்களும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

உள்ளாட்சிசபைத் தேர்தல், மேதினக் கூட்டம் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

அவ்வேளையில் இம்முறை மே தினக் கூட்டத்தை பிரமாண்டமாக நடத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். இதற்கு மேலும் சில அரசியல் பிரமுகர்களும் ஆமாம் சாமி போட்டுள்ளனர்.

எனினும், இதற்குப் பஸில் ராஜபக்ச பச்சைக்கொடி காட்ட மறுத்துள்ளார். 'தொகுதி மட்டத்தில் கூட்டங்களை நடத்தினால் போதும், பிரமாண்ட கூட்டங்கள் அவசியமில்லை. மக்களிடமும் பணம் இல்லைதானே...' என பஸில் கூறியுள்ளார். பஸிலின் இந்த அறிவிப்பால் மஹிந்தானந்த கடுப்பாகினார். அதற்குப் பிறகு கூட்டத்தில் அவர் எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லையாம்.

## பதவி

முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி வழங்கப்படவுள்ளது என சில வாரங்களுக்கு முன்னரே 'அறிந்தும் அறியாமலும்' பகுதியில் நாம் தகவல் வெளியிட்டிருந்தோம். அதற்கான ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

பாதுகாப்புச் செயலாளர் பதவியை ஏற்குமாறு ஆளுங்கட்சியில் உள்ள முக்கியமான பிரமுகர்கள் சிலர், மகேஷ் சேனாநாயக்கவை தொடர்புகொண்டு அழைப்பு விடுத்திருந்த நிலையில், உயர்மட்ட அரச அதிகாரிகள் அவருடன் பேச்சு நடத்தியுள்ளனராம்.

" பாதுகாப்புத் துறையில் சிற்சில மாற்றங்கள் இடம்பெறவேண்டும். அவ்வாறு மாற்றங்கள் இடம்பெற்ற பின்னர் தகுதியானவர்கள் அந்தந்த இடங்களுக்கு நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் 'சிஸ்டம் சேஞ்ச்' இடம்பெற்று, சிறந்த சேவை வழங்கப்படும். இது நடந்தால் நிச்சயம் நான் பதவியேற்பேன்." என்று அந்த அரச அதிகாரிகளிடம், மகேஷ் சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளாராம்.

தற்போதைய பாதுகாப்புச் செயலாளருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று வழங்கப்படலாம் எனவும் கதை அடிபடுகின்றது.

## தேர்தல்

" தேர்தலை நடத்துவதற்கான பொருளாதாரச் சூழ்நிலை தற்போது இல்லை. சிலவேளை தேர்தல் நடைபெற்றால்கூட அதில் பெரிய மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. ரூபாவை மேலும் வலுப்படுத்த வேண்டியதே எமது பிரதான இலக்காக இருக்கவேண்டும். அதனை முதலில் செய்வோம். பிறகு மக்கள் ஆதரவு எம்மைத் தேடிவரும்..."

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , ஆளுங்கட்சியினரிடம் குறிப்பிட்டு, அவர்களுக்கு உற்சாகமூட்டியுள்ளார். ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன்போது பலரும் தேர்தல் சம்பந்தமாக ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். இதனால் ஜனாதிபதி சற்றுக் கடுப்பாகியுள்ளார். பொருளாதார மீட்புதான் எனது முதன்மை இலக்கு. அதைப் பற்றிப் பேசினால் நல்லது எனக் குறிப்பிட்டு உரையைத் தொடர்ந்தார். " பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க நான்கு ஆண்டுகள் வரை செல்லும் என எதிரணிகள் கூறின. ஆனால் 8 மாத காலப்பகுதிக்குள் நான் பல விடயங்களைச் செய்து காட்டியுள்ளேன். ஐ.எம்.எப். கடனும் இம்மாதம் கிடைக்கவுள்ளது. அதன்பின்னர் மக்களின் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்." எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன், சந்தர்ப்பவாத அரசியலுக்காகவே எதிரணிகள் தேர்தல் கோருகின்றன. ஆனால் பந்து தற்போது எமது பக்கம், எனவே, ஆளுங்கட்சியினரும் உரிய பதிலடியை கொடுக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். தேசிய மட்டத்திலான தேர்தலொன்றை நடத்துவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக உள்ளதென சந்திப்பில் கலந்துகொண்ட சிலர், தமது சகாக்களிடம் குறிப்பிட்டுள்ளனர்.



## இருந்து கதைப்பம்

○ கோகுலராகவன்

# வாழும் கவிதை!

'First they came for a communist
And I didn't speak out
Because I am not a communist.....'

இவ்வாறு தொடங்குகிறது ஒரு ஜெர்மனியக் கவிதை. இது கவிதை வடிவத்தை ஒத்ததாக இருந்தாலும் வசனக் கவிதை (prose) என்ற வகுதிக்குள் அடங்கும் அமைப்புடையது என்பதே கவனிக்கத் தக்கது.

இதை எழுதியவர் ஜெர்மனியைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து பாதிரியார் மாட்டின் நீமோலர் (Martin niemoller ) என்பவர். தத்துவவாதியான நீமோலர் வேறு கவிதைகள் எழுதியதற்கான பதிவுகள் இல்லை.


ஒரு கவிதையே அவரை உலகப்புகழ் பெற்றவராக்கி விட்டது. மாட்டின் நீமோலரின் இந்தக் கவிதையை நான் முன்னர் படித்தபோது , அவரை ஒரு யூதர் என்றே நினைத்திருந்தேன். ஆனால் அவர் ஒரு ஜெர்மானியர்.

ஹிட்லரின் யூத இனஅழிப்பின்போது அதைத் துணிந்து எதிர்த்த ஜெர்மானியர்களில் நீமோலர் முக்கியமானவர்.

இத்தனைக்கும் ஆரம்பத்தில் ஹிட்லரின் தீவிர விசுவாசியாகவே நீமோலர் இருந்திருக்கிறார்.

ஹிட்லரிடம் காணப்பட்ட "ஜெர்மனியை வளர்க்கவேண்டும்" என்கிற எண்ணம் நீமோலரைக் கவர்ந்த படியால் ஹிட்லரை ஆட்சியில் அமர்த்தப் பாடுபட்டவராக ஆரம்பத்தில் இருந்தார். ஆனால் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தபின் அவருடைய யூத இன அழிப்புக் கொள்கையை வெளிப்படுத்தியபோது, நிமோலர் ஹிட்லரை எதிர்க்கத் தொடங்கினார்.

இதனால் நீமோலர் சிறை வைக்கப்பட்டார். 1937 இல் சிறைக்குள் சென்ற நீமோலர் 1947 இல் கூட்டுப் படைகளால் விடுவிக்கப்படும் வரை 10 வருடம் சிறையில் இருந்தார். யாரை ஆட்சிக்கு கொண்டு வந்தாரோ அவரே இவரைச் சிறையில் தள்ளியிருந்தார். வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைதான்.




ஆனாலும் ஹிட்லரின் ஆதரவாளராக இருந்த காரணத்தால் ஒரு வகையில் விமர்சிக்கப்பட்டவராகவே நீமோலர் இருந்தார். யாருக்குத் தெரியும் ? அதிகாரம் கிடைத்த பின் ஹிட்லர் மாறிவிடுவார் என்று.

பத்து வருட சிறை வாழ்க்கையே தன்னிடம் மனிதாபிமான விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக நீமோலர் கூறுகின்றார்.

நீமோலர் 1984 இல் இறக்கும் வரை அவ்வாறே வாழ்ந்தார். பத்துக்கும் மேற்பட்ட தத்துவ நூல்களை அவர் எழுதி இருக்கிறார்.

அவரது இந்தக் கவிதை பல மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**அந்தக் கவிதையின் தமிழ் மொழியாக்கம் இது**

அவர்கள் ஒரு பொதுவுடமைவாதியை தேடி வந்த போது
நான் எதுவும் பேசவில்லை.
ஏனென்றால்
நான் பொதுவுடமைவாதியல்ல
அவர்கள் ஒரு சமத்துவவாதியை தேடி வந்த போது
நான் எதுவும் பேசவில்லை.
ஏனென்றால்
நான் சமத்துவவாதியல்ல
அவர்கள் ஒரு தொழிற்சங்கவாதியை தேடி வந்த போது
நான் எதுவும் பேசவில்லை.
ஏனென்றால்
நான் தொழிற்சங்கவாதியல்ல
அவர்கள் ஒரு யூதனைத் தேடி வந்த போது
நான் அமைதியாக இருந்தேன்,
ஏனென்றால்
நான் ஒரு யூதனல்ல.
இறுதியில் அவர்கள் என்னைத் தேடிவந்த போது
எனக்காக பேச
யாருமே இல்லை.

[கவிதை டொச்சில் இருந்து ஆங்கிலத்திற்கு
மொழிபெயர்க்கப்பட்டது.
தமிழில் :கோகுலராகவன்.]

கிட்ட எழுபது வருடங்கள் கடந்தும் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதே இந்தக் கவிதையினதும் நீமோலரதும் வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
12 மார்ச் 2023

# ரஷ்யா – உக்ரைன் ஏன் ஓயவில்லை போர்?

கேணல் ஹரிகரன் (இந்தியா)



**ரஷ்யாவால் மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுதல் ஏற்படலாம் என்று காரணம் காட்டி, அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவின் எல்லை நாடுகளில் நேட்டோ தன்னைப் பலப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் முன்னணியில் ரஷ்யாவின் பங்காளி நாடான உக்ரைனும் ஒன்று. அதைக் கண்டு கலக்கம் கொண்ட ரஷ்யா, நேட்டோவின் முயற்சிகளை உக்ரைனில் தவிர்ப்பது தனது படையெடுப்புக்கு ஒரு காரணம் என்று கூறுகிறது.**

ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி தொடர்ந்த போர் ஒருவருடம் கடந்த பின்னரும் தொடர்ந்து நீடிப்பது உலக அளவில் கவலை தரும் விஷயம். ஏற்கனவே, போரின் விளைவாக உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கோதுமை, சோளம், பெற்றோலியம் சார்ந்த எரிபொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆசிய ஆபிரிக்க நாடுகள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்புத் துறையின் அனுமானப்படி இந்தப் போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் ஒட்டு மொத்தமாக இரண்டு லட்சம் வீரர்களை இழந்துள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கணிப்பின்படி ஜனவரி 15ஆம் ஆண்டு வரை இந்தப்போரில் குழந்தைகள் உட்பட 7000 அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அமெரிக்காவின் கூற்றுப்படி போரில் ஈடுபடாத 20,000 சாதாரண மக்கள் இந்தப் போரில் உயிரிழந்துள்ளார்கள்.

உக்ரைனில் போரின் விளைவாக பல முக்கியமான நகரங்கள் தரைமட்டமாகியுள்ளன. ஏறத்தாழ ஒரு கோடியே 74 லட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூறுகிறது.

ரஷ்ய அதிபர் புடின் இந்தப் போரில் ரஷ்யா அணு ஆயுதங்களை உபயோகிக்காது என்று மற்ற நாடுகள் எண்ணக்கூடாது என பல முறை எச்சரித்துள்ளார். அத்தகைய ஆபத்தான சூழ்நிலை இருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் சபையும் அதற்கு செயலாக்கம் அளிக்கும் பாதுகாப்புச் சபையும் போரை முடிவுக்குக் கொண்டு வர உருப்படியான முயற்சிகள் எதையும் இதுவரை எடுக்கவில்லை.

இதற்கு முக்கிய காரணம், 15 அங்கத்தினர் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' உரிமை பெற்ற நிரந்திர அங்கத்தினர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் செயல்பாடே காரணம். ஆகவே, அவர்கள் இணக்கம் இருந்தால்தான் உக்ரைன் போரை முடிவுக் கொண்டு வரமுடியும். அதற்கான முயற்சிகள் எதுவும் பாதுகாப்பு சபையில் இதுவரை வெற்றி பெறவில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் கார்கில் போரில் பத்து நாட்கள் மோதிக்கொண்ட போதே, அது அணு ஆயுதப்போராக மாறும் ஆபத்து ஏற்படலாம் என்று ஐரோப்பிய, அமெரிக்க அரசுகள் கூக்குரலிட்டன. ஆனால், அதைவிட பயங்கரமான அணு ஆயுதப் போர் மூளும் சூழ்நிலை உக்ரைனில் நிலவினாலும் அதை இந்த நாடுகள் ஏன் கண்டு கொள்ளவில்லை?

அதற்கு முக்கியமான காரணம் தற்போது உலகில் நிலவும் 'பிரெட்டன்வுட்' ஒழுங்கு முறையாகும். இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில், அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகள் சர்வதேச பொருளாதாரத்தை வழிநடத்த 'பிரெட்டன்வுட் 'ஒப்பந்தத்தை உருவாக்கினர். அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக உலக நாடுகள் போரைத் தவிர்த்து வாழ பல்வேறு ஒழுங்கு முறைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் விளைவாகவே அமெரிக்க டொலர் உலக பொருளாதரத்தின் அடிப்படை செலாவணியாக தற்போது கருதப்படுகிறது.

இந்த 'பிரெட்டன்வுட் 'ஒழுங்கு முறைதான் இன்றுவரை அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாக ஆளுமை செய்ய உதவுகிறது. 'பிரெட்டன்வுட்' ஒப்பந்தத்தில் பங்கு பெற அப்போதைய வல்லரசுகளில் ஒன்றான சோவியத் யூனியன் மறுத்துவிட்டது. சோவியத் அரசுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த பனிப்போருக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அந்தப் பனிப்போர் காலத்தில், ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் அச்சுறுத்தலைத் தவிர்க்க, அமெரிக்கா மற்றும் 30 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் 'நேட்டோ பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நேட்டோ படைகள் அமெரிக்காவுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போர்களில் பங்கு பெற்றன. நேட்டோ அமைப்பு 1991இல் சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு, ஐரோப்பாவில் ஏற்பட்ட பூகோள மற்றும் அரசியல் மாற்றங்களை தனக்குச் சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தது. ரஷ்யாவால் மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுதல் ஏற்படலாம் என்று காரணம் காட்டி, அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவின் எல்லை நாடுகளில் நேட்டோ தன்னைப் பலப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் முன்னணியில் ரஷ்யாவின் பங்காளி நாடான உக்ரைனும் ஒன்று. அதைக் கண்டு கலக்கம் கொண்ட ரஷ்யா, நேட்டோவின் முயற்சிகளை உக்ரைனில் தவிர்ப்பது தனது படையெடுப்புக்கு ஒரு காரணம் என்று கூறுகிறது. இத்தகைய சந்தேக சூழ்நிலையைத் தவிர்க்க நேட்டோ அமைப்பு இதுவரை எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

அதற்கு மாறாக, நேட்டோ அமைப்பு அமெரிக்காவின் உந்துதலுடன் ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் வெற்றி பெற பெருமளவில் பொன்னும், பொருளும், ஆயுதங்களும் அளித்து வருகின்றது. 'கீல் இன்ஸ்டிரியூட்' என்ற அரசு சாரா அமைப்பு கடந்த ஆண்டு ஜனவரி 24 முதல் நவம்பர் 22 வரை மேற்கொண்ட கணிப்பின் படி, உக்ரைனுக்கு 46 நாடுகள் ஒட்டு மொத்தமாக அளித்த உதவியின் மதிப்பு 109 பில்லியன் யூரோ . அந்த உதவியில் அமெரிக்காவின் பங்கு 53% ஆகும். இந்தப் போர் தொடருவதற்கு, இந்தப் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகள் உக்ரைனுக்கு தரும் உந்துதல் மற்றொரு முக்கிய காரணமாகும்.



சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இருந்த நெருங்கிய உறவு 1961இல் இருந்து விரிசல் காண ஆரம்பித்தபோது அதை அமெரிக்க அதிபர் நிக்சன், அமெரிக்காவுக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தார். அவருக்கு பின் வந்த அதிபர்களும் அமெரிக்க - சீன உறவை மேலும் வலுப்படுத்தினர்.

அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் சீனாவில் பெருமளவில் முதலீடு செய்ய, சீனாவில் தொழில் வளர்ச்சி உலக அளவில் பெருகியது. அமெரிக்கா தனது சீன உறவை, தனது ஒரு முனை உலக ஆதிக்கத்துக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

அமெரிக்க - சீன உறவில் ஏற்பட்ட முன்னேற்றத்தை சீனாவும் தனது பொருளாதாரத்தையும் போர் படைகளின் திறனையும் விரிவுபடுத்த உபயோகித்துக் கொண்டது. சீனா தற்போது உலகப் பொருளாதாரத்தில் வலிமையான நாடுகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அதற்கு ஏற்றாற் போல் சீன இராணுவமும் உலகிலேயே வலிமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.


வளர்ச்சி அதிகம் காணாத உலக நாடுகளில், அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகளின் 'பிரெட்டன்வுட்' ஒழுங்குமுறைக்கு எதிரான கருத்து தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பரவி வருகிறது. முக்கியமாக சர்வதேச வணிகம் உலக மயமாக்கப்பட்ட பிறகு அதைப் பயன்படுத்தி வளர்ச்சி பெற்ற ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் 'உலக ஒழுங்குமுறை 'பாரபட்சமின்றி எல்லா நாடுகளும் பயன்படும் விதமாக மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கருதத் தொடங்கின. ரஷ்யா மீண்டும் வலிமை பெறத் தொடங்கி சீனாவுடனான தனது உறவைப் புதுப்பித்தது. இந்தியாவும் 1962 சீனப் போருக்குப் பின் சிதறுண்ட சீன உறவைப் புதுப்பிக்க ஆரம்பித்தது. ஆகவே, இந்த நான்கு நாடுகளும் உலகின் பிரெட்டன்வுட் ஒழுங்கு முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் ஆங்கில முதல் எழுத்து) என்ற அமைப்பை ஆரம்பித்து 2009 முதல் ஒருங்கிணைந்து செயற்படத் தொடங்கின. இந்த அமைப்பை அமெரிக்காவும் அதன் மேற்கத்திய பங்காளி நாடுகளும் சந்தேக கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன.

2013ஆம் ஆண்டு ஷி ஜின்பிங் சீன அதிபராக பதவி ஏற்ற பின்பு உலக ஆளுமை கனவுகள் சீனாவை ஆக்கிரமிக்கத் தொடங்கின. அதிபர் ஜின்பிங் படிப்படியாக, சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பிலும், சீன அரசமைப்பு மற்றும் கம்யூனிச அதிகாரத்தை நிலைநாட்ட உதவும் இராணுவத்தின் உள் அமைப்பிலும் தனது ஆதரவை பலப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் எடுத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் உலக வணிகத்தில் கையாண்ட முறைகளும் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை ஏற்படுத்தின.

ஹொங்கொங், பல ஆண்டுகளாக சீனாவின் ஒரு பகுதி. ஆனாலும், ஓரளவு தன்னிச்சையுடன் இயங்கி வந்தது. ஆனால், ஜின்பிங் தனது ஆளுமையின் கீழ் அதைக் கொண்டு வர எடுத்த தடாலடி முயற்சிகள் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை எற்படுத்தின. மேலும், தென் சீனக் கடலில் ஜின்பிங் சீனாவின் கடல் எல்லையை விரிவாக்கி அதில் உள்ள பல குட்டித் தீவுகளின் மீது தீவிரமாக உரிமை கொண்டாட ஆரம்பித்தார். சிலவற்றை சீனா ஆக்கிரமித்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# ஞாபகம் கொள்ளக்கூடியவை?

# ஒரு நேர்காணல் கடவுள்

பெயர் விபரம் எல்லாம் இப்போது எடுத்துக் காட்டும் நிலையில் இல்லை. அச்சொட்டாக மேற்கோள் காட்டுவதும், உடனடிச் சாத்தியம் இல்லை. அடிப்படையான சில விடயங்களை முன்வைக்கலாம் என்று நம்புகிறேன். எனினும் உடனடியாக முன்னெழுந்து நிற்பவற்றைக் குறிப்பிடத் தவறப்போவதில்லை. உணவைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் கருத்து என்னவாக இருக்கும்?

அருந்தப்படத்தக்கது, தின்னக்கூடியது, சாப்பிடுவதற்கானது, பருகப்படத்தக்கது, குடிக்கக்கூடியது, திரவமானது, திண்மமானது என்ற வகையில் கருதப்படுவது இயல்பானது. ஆனால் இவற்றுக்கெல்லாம் மாறாக உணவு என்பது தன்னுள்ளே மறைத்து வைத்திருக்கக் கூடிய பெருந் தத்துவத்தைப் பற்றி என்றைக்காவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? உணவு தொடர்பான புத்தகங்களைப் பார்க்கும் போது சாதரணமாகக் கடந்திருக்கிறோம். என்றைக்காவது அந்தவகையிலான புத்தகங்களை வாசிக்க வேண்டுமெனத் தோன்றியிருக்கிறதா? வாழ்க்கையின் பெருந்தத்துவத்தை, எளிமையாக வடிவமைத்துத் தருவது தான் இவ்வகைப் புத்தகங்களின் சிறப்பியல்பா கின்றது என்பதை நான் உணர்ந்து கொண்ட தருணம் தான் பரவசமடைதலின் முழு அர்த்தத்தை தூரமாக்கியது. இதைச் சாத்தியமாக்கியது உணவில் மறைந்திருப்பது என்ன என்றொரு குறிப்புத் தான். எழுதியவரின் பெயரோ, வெளியான இதழோ, இப்போது நினைவில் இல்லை. உள்ளாக்கத்தின் சிறு பகுதி மட்டும் பதிந்திருக்கிருக்கிறது. உணவு அருந்தும் கலை தெரிந்தவனுக்கு வழமையாக அது பெரும் கனவாகவே இருக்கிறது. சட்டப்படி கிடைக்கும் உணவும் அவனுக்கு நிலையாகக் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் போதுமானதாக இருப்பதில்லை.

பறித்துண்டவனுக்கும் தந்திரமாக உணவைக் கையகப்படுத்துபவனுக்கும், உணவைத் திருடி உண்பவனுக்காகவும் தான் உணவுகள் தயாராகின்றன. பறித்து உண்பவனோ, உணவைக் கையகப்படுத்தும் தந்திரக்காரனோ, உணவைத் திருடுபவனோ அதை (உணவை )வீண் விரயம் ஆக்குகின்றனர் என்பது மட்டுமல்லை உணவு அருந்தும் கலைநுட்பம் ஏதும் அற்றவர்களாகவே இனங்காணப்படுகின்றனர் என்பது தான் பொதுவியல்பாகின்றது. அருந்தும் கலை தெரிந்தவன் உணவை என்றென்றும் மதிப்பவனாகவும், கிடைக்கும் உணவைப் போற்றி, முழந்தாழிட்டு வணங்கி விட்டு, அதை அருந்துவதற்கு தயாராக இருக்கிறான். ஆனால் உணவு வகைகளும் எவையும் அவனுக்கு நெருக்கமாகவே இல்லை. விளம்பரங்களிலும், ஓவியங்களிலுமாக அவனைப் பார்த்துக் கண் சிமிட்டுகின்றன. இவ்வகை உணவுகளின் மெய்ப்பெறுமதியைக் காட்டிலும், பல மடங்கு விலை செலுத்தக் கூடியவர்களை நோக்கித்தான், இவையெல்லாம் வேகமாக நகர்வதைப் பார்த்து அருந்தும் கலை தெரிந்தவன் ஒன்றில் பெருமூச்செறிகிறான் அல்லது தனக்குள் நகைத்துக் கொள்கிறான். இந்த நிலையில் அவனால் மேற்கொள்ளக் கூடியது இது தான். ஆனால் இதிலிருந்து தற்புதுமையான பிரதிகள் தோன்றுவதற்கான புள்ளி இடப்படுகிறது என்பது தான் என்போன்ற வாசகனுக்கு மகிழ்வினைத் தரக்கூடிய ஒன்றாக அமைகின்றது எனலாம். இதை சில வேளைகளில் நீங்களும் எங்காவது வாசித்திருக்கக்கூடும். அல்லது மேலோட்டமாகப் பார்த்து விட்டு நகர்ந்திருக்கவும் கூடும். அதைப்பற்றிய விவாதம் இங்கே பொருத்தமாக இருக்காது என்பதால் விட்டு விடலாம்.

அடுத்த கட்டமாக நான் சொல்லப்போவதும், எழுதியவரின் பெயரோ புத்தகத்தின் பெயரோ தெரிந்திராத நிலையில், மனப்பதிவான பகுதிகள் தான். மனனம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் எனக்கு என்றைக்கும் இருந்ததில்லை. தவிரவும் மனனம் செய்ததை எல்லாம் உடனடியாகவே மறந்து விடக் கூடிய இயல்பு உடையவனாகவே எப்போதும் இருந்து விடுவதால், நான் எதையுமே மனனம் செய்ய எண்ணுவதே இல்லை. தொடந்து இடம் பெறப்போவதெல்லாம் மனம் கவர்ந்திருப்பவை. அனுபவத்தில் நன்கு உணர்ந்து கொண்டவை. இதனால் மனனம் செய்யாமலே மனப் பதிவாகி விட்டவை . உங்களுக்கு நம்பத்தகாதவையாக இருக்கலாம்.

முழுமையாகக் கேட்ட பின்பாக உங்களை அறியாமலே இதெல்லாம் உங்களுக்கு மனப்பதிவாகி விடுவதை அனுபவமாகப் பெறுவீர்கள் என்பதையும் இப்போதும் உங்களுக்கு முன்னேற்பா டாகச் சொல்லிக் கொள்கிறேன். ஏனெனில் நமக்குக் கிட்டும் அனுபவம் என்பது ஒரு வகையில் மனப்பதிவு தானே, புறக்கணிப்பதற்கென்று எதுவும் இல்லை. எல்லாமே முக்கியத்து வப்படுத்த வேண்டியவை தான். ஏனெனில் தற்செயலாகவோ அல்லது திட்டமிட்டோ நம்மால் புறக்கணிக்கப்படுபவை சில வேளைகளில் நமக்கு அச்சுறுத்தலாக மாறலாம். அல்லது பாரதூரமான விளைவுகளுக்கு ஏதுவாகலாம், எதிர்பாராத விதமான நன்மை பயக்கலாம். இந்த எதிர்பாராத விதமாக நன்மை பயப்பதென்பது அரிதானதொரு நிகழ்வாகவே பெரும்பாலும் அமைந்திருப்பதால், சுய பாதுகாப்பின் பொருட்டு எதையும் புறக்கணித்து விடாது இருப்பதே நல்லதொரு தெரிவாக அமையும். இது அகம் புறம் இரண்டுக்குமே பொருந்தி வரக்கூடியது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். விளங்கிக்கொள்ள சிரமமாக இருந்தால் உங்களது வாழ்வில் நிகழ்ந்த ஏதாவது ஒரு சம்பவத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

எனக்கு மிக நெருக்கமான நண்பர் ஒருவருக்கு இடது காலில் ஒரு புண் வந்தது. மிகச் சிறிய புண் தான். அவர் அதைப் புறக்கணித்த போது நான் எச்சரித்தேன். அவர் பொருட்படுத்தவில்லை. பொருட்படுத்தாமல் இருப்பது அவரது தனி மனித உரிமை என்பதால் அதற்கு மேல் நான் எதுவும் செய்ய முடியாதல்லவா? என்னால் இயலுமான அளவுக்கு அவரைச் சந்திக்கும் போதெல்லாம் எச்சரித்துக் கொண்டே இருந்தேன். அவரும் பொருட்படுத்தாமல் புறக்கணித்துக் கொண்டே இருந்தார். இதன் விளைவாக, முதலில் ஒவ்வொரு விரலாக இழந்தார். அடுத்து பாதத்தை இழந்தார். பின்னர் முழங்கால் வரைக்கும் இழந்தார். இறுதியில் பரிதாபமாக உயிரிழந்தார். இதுவொரு சின்ன எடுத்துக்காட்டுத்தான். இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அடையாளங்கண்டு பொருத்திப்பார்த்து நடைமுறையை உணர்ந்து கொள்ள வேண்டியது நீங்கள்தான். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி என்பது எவருக்கும் சாத்தியமாகக் கூடியதா எனக் கேட்டால் நீங்கள் தரப்போகும் பதில் என்னவாக இருக்கும். இதிலென்ன சந்தேகமென நீங்கள் கேட்டால் மோசமான அனுபவத்தை நீங்கள் பெறவில்லை எனக் கருதலாம். இறக்கும் வரை விடாமுயற்சி செய்து வெற்றியைக் கனவு கண்டு போய்ச் சேர்ந்த அநேகரின் துயரக் கதைகளை நானறிவேன். அவர்களுக்கு வெற்றி ஏன் சாத்தியப்படாமல் போனது என்பது தான் முக்கியமானது. வெற்றியென்பது விடாமுயற்சியில் தங்கியிருந்தால் மட்டுமே சாத்தியமாகும். நான் மேற்குறிப்பிட்ட துயரக்கதைகளிளெல்லாம் வெற்றியென்பது விடாமுயற்சியில் தங்கியிருக்க வேண்டியதில்லை. மாறாக அது சில இடைத்தரகர்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்தது. இதற்குமொரு சின்ன எடுத்துக்காட்டைத்தான் முன்வைக்க வேண்டியிருந்தது.

சக்கரநாற்காலிக்காரனொருவன் ஒரு தேர்ந்த படைப்பாளியாகப் புகழ் பெற்றிருந்தான். ஒரு மாற்று இலக்கிய இதழின் ஆசிரியர் குழுவில் முக்கிய செயற்பாட்டாளராகவுமிருந்தான். அவனொரு தேர்ந்த இலக்கியவாதியாகப் புகழடையக் காரணமாயிருந்தவர், எழுத்து வணிகத்தில் உச்சந்தொட்டிருந்த ஒருவர் . இவர் தங்களது பெயர்களை விளம்பரப்படுத்த மாட்டாராவெனப் பலரும் ஏங்கித் தவித்திருந்த வேளையில் அவர் சக்கர நாற்காலிக்காரனின் பெயரை விளம்பரப்படுத்தினார். அந்த விளம்பரத்தோடு அவன் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இலக்கியவாதியாகி விட்டான். அவன் எதை எழுதினாலும் பேரிலக்கியமாயிற்று . இந்நிலையில் தான் மாற்றிலக்கிய இதழ் தொடங்கியவர்கள் சக்கர நாற்காலிக்காரனை உள்ளீர்த்துக் கொண்டனர். அவனை உள்ளீர்த்துக் கொண்டதால் அவ்விதழ் பரபரப்பாக விற்பனையாயிற்று . இதழ் தொடங்கியவர்கள் எதிர்பார்த்திருந்ததும் அதுதானே. சக்கர நாற்காலிக்காரன் அடிப்படையில் ஒரு குழப்பமான மனநிலையுடையவன். அதனால் அவ்விதழ் தொடங்கப்பட்டு வாசகரிடத்தில் நீங்காத இடம் பிடித்திருந்த ஒரு காலகட்டத்தில் சக்கர நாற்காலிக்காரன் இதழ்க் குழுமம் தன்னைப் புறக்கணிப்பதாகக் கருதிக் குழம்பினான். ஆனால் உண்மையில் அப்பிடியேதும் நிகழ்ந்திருக்கவில்லை. [illegible] குழப்பவா [illegible] வே இதழ்க் குழுமத்துடன் தெரிவிக்கலானான். அவர்கள் நியாயமான விளக்கமளித்திருந்தும் அவன் அதை ஏற்றுக்கொள்வதாயில்லை . பாவம் அவர்களுந்தான் என்ன செய்வார்கள்? இறுதியில் அவன் அவ்விதழில் இருந்து வெளியேறுவதாகப் பகிரங்கமாக அறிவித்து விட்டு விலகினான் .

அந்தக் காலப்பகுதியில் தான் 'எக்ஸ்' என்ற ஆய்வாளன் எழுதிய ஆய்வுக் கட்டுரையொன்று சக்கர நாற்காலிக்காரன் தன்னிச்சையாக விலகிய அந்த இதழில் பிரசுரமாகியிருந்தது. அந்தக் கட்டுரை சராசரிக்கும் மேலான தரத்திலிருந்தது. 'எக்ஸ்' என்ற அந்தப் பெயர் சக்கரநாற்காலிக்காரனின் மனதில் எதிர்மறைத் தன்மையோடு ஆழப்பதிந்து விட்டது. அதன் பின்னர் சக்கர நாற்காலிக்காரன் 'எக்ஸை' பரம எதிரியாகக் கருதத்தொடங்கி விட்டான். இத்தனைக்கும் அவன் 'எக்ஸை' ஒரு போதும் நேரில் பார்த்ததுமில்லை, பேசியதுமில்லை. மனக்குழப்பவாதிகளின் செய்கைகள் தீர்மானங்களுக்கெல்லாம் வலுவான நியாயமான காரணங்களேதுமிருப்பதில்லை. அந்த வகைக்குள் இதுவும் உள்ளடங்கும் .

அடுத்த சில மாதங்களில் சக்கரநாற்காலிக்காரன் புதிய இதழொன்றை மாதந்தோறும் வெளியிடத்தொடங்கினான். அவ்விதழ் 'எக்ஸை' வெகுவாகக் கவர்ந்திருந்த நிலையில் அதற்கொரு ஆய்வுக்கட்டுரையை வரைந்தனுப்பினான். பிரசுரமாவதற்குரிய நியாயமான காலங்கடந்தும் அந்தக்கட்டுரை இதழில் வெளிவரவேயில்லை . ஒவ்வொரு மாதமும் அவ்விதழை வாங்கி வெகு எதிர்பார்ப்புடன் வாங்கிப் புரட்டிப் புரட்டிப் பார்த்து 'எக்ஸ்' மோசமாக ஏமாந்து போனான் . இதழில் வந்திருந்த சக்கர நாற்காலிக்காரனின் தொடர்பு இலக்கத்துக்கு 'எக்ஸ்' அழைப்பெடுத்துப் பேசினான். சக்கர நாற்காலிக்காரன் தான் கதைத்தான். 'எக்ஸ்' தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு விடயத்தைச் சொன்னான்.

"ஆமா!ஆமா . உங்க கட்டுரை கிடைச்சிச்சு. பரிசிலீக்கப்பட்டுக் கொண்டிருக்கு.விரைவில் ஒரு சாதகமான பதில் உங்களுக்குக் கிடைக்கும்" என்று சொன்னான் . அந்தப் பதிலிலிருந்து 'எக்ஸ்' சக்கரநாற்காலிக்காரனின் இதழில் தனது ஆய்வுக்கட்டுரை வெளியாகுமென முழுமையாக நம்பினான். இவ்வாறாகப் பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றுவரை எக்ஸின் கட்டுரை சக்கரநாற்காலிக்காரனின் இதழில் வெளியாகவேயில்லை . அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து மேலும் சில கட்டுரைகளை 'எக்ஸ்' சக்கரநாற்காலிக்காரனின் இதழுக்கு எழுதி அனுப்பினான். அதை இன்று வரைக்கும் கைவிடவில்லை எல்லாமே குளத்தில் எறிந்த கல்லாகிவிட்ட நிலையில் எக்ஸின் தொலைபேசி அழைப்புகளுக்கோ மின்னஞ்சல்களுக்கோ சக்கர நாற்காலிக்காரன் பதிலளிப்பதில்லை என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

உண்மையில் என்ன நடந்தது தெரியுமா? சக்கரநாற்காலிக்காரன் எக்ஸின் முதலாவது கட்டுரையை தனது இதழில் வெளியிட முடிவு செய்திருந்தான் .இந்நிலையில் எக்ஸினால் மோசமாக விமர்சிக்கப்படும் வணிகரீதியில் பிரபலமான எழுத்தாளனொருவன் சக்கர நாற்காலிக்காரனுடன் வலு நெருக்கமாயிருந்தான். இந்த இடைத்தரகன் தான் சக்கரநாற்காலிக்காரனை குழப்பி இன்றுவரை எக்ஸின் கட்டுரையேதும் வெளிவராமலிருப்பதற்கான நற்பணியை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். (இந்தக்கதை மட்டும் எனது சொற்களால் உருவானதாகும்)

இதிலிருந்து விளங்கிக்கொள்வது என்னவெனில் விடா முயற்சிக்கு முன்பாக இடைத்தரகர் யாராவது இருக்கிறாரா? என்பதை பகுப்பாய்வு செய்து உறுதிப்படுத்திக் கொள்வது பிரதானமான தொன்றாகும். அல்லாவிடினோ விடாமுயற்சி வீண்முயற்சி யாகிவிடும் என்பதே எக்ஸின் நடவடிக்கைகள் மூலமாகத் தெரியவருகின்றது. எக்ஸைப்போல் மற்றும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கொரு முடிவில்லையா என்றொரு கேள்வியெழுந்தால் இரண்டுவிதமாகப் பதில் சொல்லாம். விடாமுயற்சி செய்து கொண்டேயிருக்கும். எக்ஸ் முதலியோர் தம் நிலையுணர்ந்து சக்கரநாற்காலிக்காரனையும் அவனது இலக்கிய இதழையும் முக்கியத்துவமற்றதாக்கிக் கொள்ளலாம். இது குறித்த நபர்களது விடாமுயற்சிக்கு முற்றுப்புள்ளியிடும். மாறாகக் குறித்த நபர்கள் விடாமுயற்சியை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என விடாப்பிடியாக நின்றால் சக்கரநாற்காலிக்காரன் மற்றும் அவனது நெருங்கிய நண்பனான இடைத்தரகர் (தடைத்தரகர்) போன்றோர் உயிர் நீக்கும் வரையில் பொறுமையுடன் காத்திருந்து அதன்பின்பாக விடாமல் முயன்றால் ஏதும் சாதகமாக நிகழும் சாத்தியமிருக்கிறது என்பதைக்குறிப்பிட்டாக வேண்டும். இதுதான் யதார்த்தமானது.

இனித்தொடரப்போவதெல்லாம் அநேகமாக நினைவில் நிலைத்திருப்பவையாகத்தான் இருக்கும். சில எனது வசனங்களாகவுமிருக்கலாம். குழப்பத்தை எளிதாக தவிர்த்துக்கொள்ள மேற்கோளிடுகிறேன். மேற்கோள் இடப்படாதிருக்கும் பகுதிகள் மட்டும் எனது வசனங்களாலானவை என்பதை உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்யா – உக்ரைன்...

(06 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அதனால், சீனாவுடனான உறவை தென்கிழக்கு ஆசிய நாடுகள் சந்தேகக் கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன. தென் சீனக் கடலில் கோலோச்சி வந்த அமெரிக்கக் கடற்படை அடிக்கடி சீனப் போர் விமானங்களையும் போர்க் கப்பல்களையும் எதிர் கொள்ள ஆரம்பித்தது. இது அமெரிக்க= சீன உறவில் விரிசல்களை ஏற்படுத்தின. இப்போது சீனா தாய்வான் தீவை ஆக்கிரமிக்கப்போவதாகப் பயமுறுத்தி வருகிறது.

மேலும், 2013இல் ஜின்பிங் சீனாவை ஆசியா மற்றும் ஐரோப்பியப் பகுதிகளுடன் இணைத்து, சீனாவின் செல்வாக்கை பெருக்க 'பால மற்றும் சாலை இணைப்பு (Belt and Road Initiative) திட்டத்தை பெரும் அளவில் மேற்கொண்டுள்ளார். இதன் விளைவாக சீனாவின் அரசியல் மற்றும் வணிக செல்வாக்கு என்பன தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் பெருமளவில் பரவி உள்ளது. அத்தகைய முயற்சிக்குப் பாதுகாப்பு அளிக்க சீன போர்க்கப்பல்கள் இந்திய - பசுபிக் பெருங்கடலில் அதிக அளவில் பிரவேசிக்க தொடங்கி உள்ளன. இந்தியாவின் சீன எல்லையில், சீனப்படைகள் அத்துமீறிப் பிரவேசிப்பது வழக்கமாகி விட்டது. சீனாவின் பெருகி வரும் ஆதிக்கத்தை கட்டுக்குள் வைக்க இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் குவாட் என்னும் நாற்கர கட்டமைப்பை அமைத்துள்ளன. இந்த முயற்சியை சீனா தனது ஆளுமைக்கு எதிரான சவாலாகப் பார்க்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், தொடர்ந்து வரும் உக்ரைன் போரில் உலகின் மூலோபாயப் பாதுகாப்பு அமைப்புகள் உருமாறி வருகின்றன. அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது திணித்துள்ள பொருளாதார மற்றும் வியாபாரத் தடைகளை பெரும்பான்மையான ஆசிய ஆபிரிக்க நாடுகள் பின்பற்ற மறுக்கின்றன. இவற்றில் இந்தியா, சீனா, துருக்கி, ஈரான், தென்னாபிரிக்கா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அடங்கும். இந்த நாடுகள் தங்கள் நாட்டின் சுய நலனுக்காகவே அத்தகைய முடிவுகளை எடுக்கின்றன. ஆகவே, இந்த நாடுகள் ஒருங்கிணைந்து போரை நிறுத்த முயற்சிப்பார்களா என்பது சந்தேகமே.

ஏனெனில், போரை முடிவுறுத்தும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது தொடர்பில் உக்ரைன் முன்வைத்துள்ள நிபந்தனை.ரஷ்யா வசம் உள்ள ரஷ்ய வம்சாவளியினர் வாழும் கிழக்கு உக்ரைன் மற்றும் க்ரிமியா பகுதிகளை விட்டு முழுமையாக அகல வேண்டும் என்பதே. அதற்கு மாறாக, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவின் நிபந்தனை - செப்ரெம்பர் 2022 வரை தான் ஆக்கிரமித்த உக்ரைன் பகுதிகளைத் தன் வசம் நிரந்தரமாக அளிக்க வேண்டும் என்பதே.

இத்தகைய இழுபறியான சூழ்நிலையில், அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் போரில் வெற்றி காணாவிட்டாலும் ரஷ்யாவின் போர்த்திறனை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றன. ஆகவே, அவை நேரடியாக போரில் ஈடுபட தயக்கம் காட்டினாலும், பொன்னையும் பொருளையும் அளித்து உக்ரைனை உசுப்பி விட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த சமயத்தில் 'கொவிட் 19' தொற்றின் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தியா ஓரளவு இதன் தாக்கத்தில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டாலும், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவு இந்த ஆண்டும் தொடரும் என்பது வல்லுநர்களின் கணிப்பு. உலகப் பொருளாதாரத் தட்டுப்பாடு உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா.வை ஊக்குவிக்குமா? அதுவும் சந்தேகமே. ஆகவே, வரும் மாதங்களில் போரின் உக்கிரம் குறைந்து, இரு நாடுகளும் களைத்தாலும் சீற்றம் காட்டுவதில் குறைவு இருக்காது.

இந்த இழுபறி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்? தற்போது, போரின் போக்கை அனுமானிக்க, ஜெலன்ஸ்கி மற்றும் புடின் ஆகியோரின் ஜாதகத்தை யாரேனும் நல்ல சோதிடரிடம் தான் கொடுக்கவேண்டும்.

## இனவாதத்தை....

(03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

வேலை நிறுத்தம் பற்றிய அரசாங்கக் கணக்கெடுப்பை மேற்கோள்காட்டி, கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான 'டெய்லி மிரர்' ஆங்கில நாளிதழ் செய்தியின் பிரகாரம், இலங்கைத்தீவில் ஒன்பது மாகாணங்களிலும் உள்ள 14 இலட்சத்து 84 ஆயிரத்து 51 அரச ஊழியர்களில், 44 ஆயிரத்து 550 பேர் மாத்திரமே வேலைநிறுத்தில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிகின்றது.

இவர்களில் வடமேற்கில் முப்பத்தி ஆறு வீதமும், வட மத்திய மாகாணத்தில் நாற்பது வீதமும், தெற்கில் நாற்பத்து ஒன்று வீதமும், மத்திய மாகாணத்தில் இருபத்து ஐந்து வீதமும், கிழக்கில் இருபத்து ஒரு வீதமும், ஊவாவில் பத்தொன்பது வீதமும் அடங்குகின்றனர். ஆனால் வட மாகாணம் பற்றிய மதிப்பீடு குறித்த செய்தியில் இல்லை.

கிழக்கில் இருபத்து ஒன்பது வீதம் என்பதில் முஸ்லிம்கள், சிங்களவர்களையும் சேர்த்தே குறிக்கும். அப்படிப் பார்ப்பதாக இருந்தால் கிழக்கில் தமிழ் அரச ஊழியர்களின் வேலை நிறுத்தம் என்பது மிகவும் குறைந்தளவிலேயே உள்ளது.

ஆகவே ஈழத்தமிழ் அரச ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் பெரியளவில் கவனம் செலுத்தவில்லை என்பது தெரிகின்றது.

ஜே.வி.பி. தலைமையிலான அகில இலங்கை பொதுத் துறைமுக ஊழியர் சங்கத் தகவல்களின் படி ஐந்து இலட்சம் அரச ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் அத்தியாவசிய சேவைகளைத் தவிர ஏனைய ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் செல்லவில்லை எனவும் கூறப்படுகின்றது. (ஆனால் இவை சுயாதீன அமைப்புகள் மேற்கொண்ட மதிப்பீடுகள் அல்ல)

இந்தப் போராட்டத்தை சஜித் பிரேமதாஸ மதில்மேல் பூனை போன்று பார்த்துக் கொண்டிருக்கிறார். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ஸ் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி போன்ற கடும் எதிர்ப்பில்லாத எதிர்க்கட்சிகள் அவ்வப்போது ரணில் மீதான விமர்சனங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரணிலுக்கு நேரடி ஆதவை வழங்கி வருகின்றது. டலஸ் தலைமையிலான அணி திரிசங்கு நிலையில் உள்ளது. ரணிலுக்கு எதிரான போராட்டம் என்ற போர்வையில் சிங்கள இனவாதத்தை வேறொரு தளத்துக்கு மடைமாற்றும் அரசியல்தான் இந்தப் போராட்டங்களே தவிர, மாறாக இவை இலங்கை அரச கட்டமைப்பை மாற்றி ஏனைய தேசிய [illegible] அரசியல் விடுதலைக்கு வழிசமைக்கும் அரசியல் போராட்டங்கள் அல்ல.

2009 க்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களுக்கு ஒழுங்கான அரசியல் தலைமை இல்லாமல் போனதன் விளைவுகளே இவை.

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

**1918 ஏப்ரல் 10**
சங்குவேலி வைத்திலிங்கம் என அழைக்கப்பட்ட காசிநாதர் வைத்திலிங்கம் காலமானார். சமூக சேவைக்குப் பெயர் போன வைத்திலிங்கம் கீரிமலைக்கு வரும் யாத்திரிகர்களுக்கென அங்கு சிறாப்பர் மடத்தின் அருகில் இன்னொரு மடத்தினைக் கட்டி மிகவும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வந்தார். 1927 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் அங்குரார்ப்பண மகாநாடு இங்கு தான் நடைபெற்றது. மிகவும் சிறப்பான முறையில் சேவையாற்றி வந்த இந்த மடம் சில வருடங்களுக்கு முன்னர் டோசர் மூலம் தரைமட்டமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய அரசர் ஐந்தாம் ஜோர்ஜ் காலமான போது யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் வைத்து, அப்போதைய அரசாங்க அதிபர் பிறீமன் தனது கைகளால் 5000 பேருக்கு ஒரு கொத்து அரிசியும் ஐந்து சதமும் அன்பளிப்பாக வழங்கினார். இதை விட றிட்ஜ்வே மண்டபத்தில் 1000 பேருக்கு வேட்டி சேலை என்பனவும் வழங்கப்பட்டன.

**1918 மே 07**
அளவெட்டியில் ஆலமரமொன்றின் கீழ் மழைக்கு ஒதுங்கிய 20 பேர் மின்னல் தாக்கியதில் பலியாகினர்.

**1918 ஜூன் 11**
சிறந்த தமிழறிஞரும் பெரும் தனவந்தருமான புத்தூர் மழவராய முதலியார் காலமானார்.

**1918 செப்ரெம்பர்**
பம்பாய் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் பலர் உயிரிழந்தனர்.

**1918 செப்ரெம்பர் 14**
காராளபிள்ளை 10,000 வறிய மக்களுக்கு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வைத்து உடுபுடவைகளை அன்பளிப்புச்செய்தார்.

**1918 நவம்பர் 17**
தொடர் மழை, வெள்ளம் காரணமாக தென்னைகள் பெருமரங்கள் பாறிவீழ்ந்ததுடன் பெருமளவு வீடுகளும் சேதமடைந்தன. 24 மணித்தியாலத்தில் 25 அங்குல மழைவீழ்ச்சி பதிவாகியது.
யாழ்ப்பாண நகரசபை உறுப்பினர்கள் வெள்ள நிவாரணநிதிக்காக 100.00 ரூபா அன்பளிப்புச் செய்தனர். பலரும் பல்வேறு உதவிகளை வழங்கினர். சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு பூநகரியிலிருந்து இலவசமாக மரங்களை எடுத்து வருவதற்கு ஊர்காவற்றுறை மீனவர்கள் சம்மதம் தெரிவித்தனர். மொத்தமாக 5000 டொலர் வெள்ள நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. மலே வீதி வர்த்தகர்களும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

**1918 நவம்பர் 23**
யாழ்ப்பாண நகரசபையில் மதிப்பீட்டாளராக கடமையாற்றிய J.N. பிள்ளைநாயகம் கரைச்சி மணியகாரனாக நியமிக்கப்பட்டார்.

**1919 ஜனவரி 20**
T.C.ஜெயரத்தினம் இந்திய சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து (ஆரம்பத்தில் சிவில் சேவை பரீட்சை இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்கும் பொதுவாகவே நடத்தப்பட்டது.) இந்திய மத்திய மாநிலத்தில் ஆணையாளராக பதவி வகித்து வந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவனான இவருக்கு அந்தக் கல்லூரியில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1919 மார்ச் 01**
யாழ்ப்பாண மருத்துவமனையில் பணம் செலுத்தி பராமரிக்கும் விடுதி (paying ward) திறந்து வைக்கப்பட்டது.

**1919 மார்ச்**
கல்விப்பணிப்பாளர் டென்ஹாம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தொழில் நுட்பக்கல்லூரி அவசியமெனப் பரிந்துரை செய்தார்.

**1919 ஏப்ரல்**
சேர்.பொன்.இராமநாதன் ஆண்களுக்கான பாடசாலை ஒன்றைக் கட்டும் நோக்குடன் திருநெல்வேலியில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்தார். இந்தக்காணியில் தான் பரமேஸ்வராக் கல்லூரி அமைக்கப்பட்டு தற்போது பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டுள்ளது.

**1919 மே 10**
சண்டிலிப்பாயைச் சேர்ந்த ராவ் பகதூர் முருகேசம்பிள்ளை காலமானார். இவர் தஞ்சாவூர் மாவட்ட பிரதி கலெக்டராக (அரசாங்க அதிபர் பதவிக்குச் சமனான பதவி) கடமையாற்றியுள்ளார்.

**1919 மே**
மருத்துவர் குணம் கூக் . லண்டன் புனித பார்த்தலோமியா மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவனான இவர் 1912ம் ஆண்டு லண்டனுக்குச்சென்று அங்கு மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டார்.பின்னர் லண்டன் புனித பார்த்தலோமியா மருத்துவமனையில் விடுதி சத்திரசிகிச்சை நிபுணராகவும் மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணராகவும் நியமிக்கப்பட்டார்.

**1919 செப்ரெம்பர் 10**
புகைப்படப்பிடிப்பாளர் லோட்டன் காலமானார். பிரித்தானிய ஆட்சியாளர்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப்பெற்றிருந்த லோட்டன் அந்தக் காலத்தில் இலங்கையின் முன்னணி புகைப்படப் பிடிப்பாளர்களுள் ஒருவராக விளங்கினார். லோட்டன் எடுத்த புகைப்படங்கள் இன்றும் கொழும்பு கண்டி அருங்காட்சியகங்களில் காணப்படுகின்றன. மானிப்பாயில் இவர் வாழ்ந்த வீதிக்கு இவரது ஞாபகார்த்தமாக இவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.
மானிப்பாயில் லோட்டன் ஸ்ரூடியோ என்ற பெயரில் ஒரு ஸ்ரூடியோ அண்மைக்காலம் வரை இயங்கி வந்தது.

(வரலாறு நீளும்)

## ஒற்றைப்பார்வை

நிலவு
முற்றத்தில்
நொருங்கிக்கிடக்கிறது

மரங்களில்
வெளிறி உலர்ந்த
இலைகளின் இடுக்குகளால்
நிலவு கொட்டிச்சரிக்கும்
[illegible]
[illegible]
பாத்திரங்களில் பொறுக்கி

பெரும் மலையை
கட்டிக்கொண்டிருக்கிறார்கள்

எப்போதும் குழந்தைகளுக்கு
ஒரு குழந்தையாய்
இருக்கும் நிலவு
பாட்டியின் மடியில்
ஒளியிறகுகளை உதிர்த்திக் கொட்ட
குழந்தைகளைப் பார்த்து
பாட்டி சொல்கிறாள்
நிலவு வானத்திலென!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org